விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 09 ஞாயிற்றுக்கிழமை (25.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 006

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும்

## சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு வலியுறுத்தல்

(பிரசெல்ஸ்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப் பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சுயாதீன சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு வலியுறுத்தியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஏ.எல்.பெறுபேறுகள் இன்று வெளியாகும்

(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபெறுகள் இன்று வெளியாகும் என பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர் தரப் பரீட்சையின் பெறுபேறுகள் உயர் கல்வி அமைச்சுக்கும் பரீட்சைகள் திணைக்களத்திற்கும் இசட் வெட்டுப் புள்ளியிடலில் ஏற்பட்ட சிக்கலினால் தாமதமானது.

இந்நிலையில் குறித்த பெறுபேறு இன்று www.doenets.lk என்ற பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாக பார்வையிட முடியும் என (19ஆம் பக்கம் பார்க்க)




## காணிப் பதிவுகள் மீண்டும் நடைபெறும் அமைச்சர் உறுதி


(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணக் காணிகளைப் பதிவுசெய்யும் நடவடிக்கை விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படுமெனக் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் தலைமைகளினால் மேற்கொள்ளப்பட்ட வழக்குத்தாக்கல் காரணமாகக் காணிகளைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாகக் குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்துடன் ஆராயும் விடயங்கள் அனைத்தையும் பகிரங்கப்படுத்த முடியாது



### மன்னார் ஆயருக்கு கூட்டமைப்பு கடிதம்

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையிலான பேச்சுவார்த்தையில் இடம்பெறும் எல்லா விடயங்களையும் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவது சாத்தியமற்றதெனக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ் சிவில் சமூகம் அனுப்பிய கடிதம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மன்னார் ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப்பிற்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனால் 23ஆம் திகதியிடப்பட்ட இக்கடிதத்தில் தமிழ் சிவில் சமூகம் அனுப்பிய கடிதம் தொடர்பாகப் பதில் அனுப்புவதற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு வருத்தம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களின் ஒரு சில பிரச்சினைகள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தாங்களும் இன்னும் சிலரும் அனுப்பிய கடிதத்திற்குப் பதிலாக இக்கடிதத்தை எழுதுகின்றேன். அதிக வேலைப்பளுவின் நிமித்தம் பதில் எழுதுவதில் ஏற்பட்ட (19ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழு அறிக்கையை விமர்சித்தால் கடும் நடவடிக்கை

### எச்சரிக்கிறது அரசு

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக விமர்சிக்கும் அமைப்புகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக மனித உரிமை அமைப்புகள் வெளியிட்டுள்ள விமர்சனங்கள் அரசுக்கு கடும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையிலேயே குறிப்பிட்ட மனித உரிமை அமைப்புகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

இதுகுறித்து தகவல் வெளியிட்டுள்ள பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக அனைத்துலக சமூகத்திற்கு பொய்யான (20ஆம் பக்கம் பார்க்க)

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்; வடக்கு, கிழக்கில் காற்றுடன் மழை

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் நாட்டின் கிழக்குப் பகுதியில் ஆதிக்கம் செலுத்தியதோடு, தாழமுக்கம் தற்போது பொத்துவில் நகரில் இருந்து 550 கிலோ மீற்றர் கடற்பரப்பில் நிலைகொண்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்கரை பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும்என திணைக்களம் எச்சரித்துள்ளது.

இக்கால நிலை மாற்றத்தால் குறித்த கடற்கரை பகுதிகள் மிகவும் கொந்தளிப்பாக காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மீனவர்கள் தொழிலுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்வது சிறந்தது என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, வட மத்திய, மத்திய, ஊவா மாகாணங்களில் தொடர்ந்தும் காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (பா-8)

உங்களது அனைத்து வகையான பாவனை (Bill, Reload) கட்டணங்களை ஒரே இடத்தில் செலுத்திக் கொள்ளுங்கள்!

Dialog · Sri Lanka Telecom · airtel · etisalat · Sri Lanka Telecom Mobitel We Care. Always. · (CEB) · WESTERN UNION MONEY TRANSFER · HSBC

வெளிநாடுகளில் இருந்து உங்கள் உறவுகளிடம் இருந்து வரும் பணத்தை WESTERN UNION பணப்பரிமாற்ற முறை மூலம் கணப்பொழுதில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் அனைத்து சேவைகளையும் தாமதம் இன்றி இலகுவாக பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள் அருகில் உள்ள

சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சி அறைகளை

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம் மானிப்பாய் நெல்லியடி சாவகச்சேரி கிளிநொச்சி சங்கானை

SINGER EXPRESS PAY

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாகப்பட்டினம் மீனவர்கள் அறுவர் ஆழியவளையில் கரையொதுங்கினர்

(மருதங்கேணி)

இந்திய நாகப்பட்டினம் மீனவர்கள் ஆறு பேர் கடந்த ஆறு நாட்களாக கடலில் தத்தளித்த நிலையில் நேற்று அதிகாலை ஆழியவளை கடற்பரப்பில் கரையொதுங்கியுள்ளனர்.

கடந்த ஆறு நாட்களுக்கு முன்னர் நாகப்பட்டினத்தில் இருந்து அளடி 1054 ஆம் இலக்க றோலர் படகில் மீன் பிடிப்பதற்காக புறப்பட்ட இவர்கள் நடுக்கடலில் படகின் இயந்திரம் பழுதடைந்த நிலையில் தத்தளித்தனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை கடல் நீரினால் இழுத்து வரப்பட்ட இவர்கள் வடமராட்சி ஆழியவளை கடற்பரப்பில் கரையொதுங்கியுள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து கடற்கரையில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் இவர்களை மீட்டு மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்கள்.

இவர்கள் வந்த றோலர் படகு தற்போது ஆழியவளை படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. (பா-4)


## 41ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி பிரார்த்தனையும்



அமரர் **கந்தையா இராசையா**

(K.R.S. ஸ்தாபகர்)

தோற்றம் 28.11.1924

மறைவு 16.11.2011

16.11.2011 ம் ஆண்டு கொழும்பில் அமரத்துவம் அடைந்த அமரர் கந்தையா இராசையா அவர்களது 41ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும் என்பதை அனைவருக்கும் அறியத் தருவதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

இங்ஙனம்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(C-5314)

## Tilko Jaffna City Hotel

TILKO hotels

Wish you all mery 'X' mas
And prosperous New Year






Enjoy delicious meal at our exclusive 'Priya' restaurant

We are specialists in wedding, birthday & other family Occasions

Let Tilko take care of all your catering Needs:

Talk to us about the extended selection now available

Call for more information: 077694 3479, 077477 9411, 077477 9412

Tilko Jaffna City Hotel (Pvt) Limited 70/6, KKS Road, Jaffna

Tel: 021 222 5969 Fax: 021 222 7291 Email: info@cityhoteljaffna.com


# தெல்லிப்பளை வைத்தியசாலையில் புதிய நோயாளர் அனுமதிகள் மூன்று நாட்களுக்கு இடம்பெறாது

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை எதிர்வரும் முதலாம் திகதி முதல் நிரந்தர கட்டிடத் தொகுதிக்கு மாற்றம் பெறுவதினால் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் மூன்று நாட்கள் புதிய நோயாளர் அனுமதிகள் இடம் பெறமாட்டாது என வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்திய கலாநிதி அ. ஜெயக்குமரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்துக்கு முன்னால் உள்ள கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையானது, எதிர்வரும் 1ஆம் திகதி முதல் தனது நிரந்தரக் கட்டிடத்தில் முழுமையாக செயற்படவுள்ளது.

இதன்காரணமாக வைத்தியசாலையின் உபகரணங்களை புதிய இடத்திற்கு மாற்ற வேண்டி உள்ளதால் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு புதிய நோயாளர் அனுமதிகள் இடம்பெறமாட்டாது. எனினும் அவசர சிகிச்சை பிரிவு வழமைபோல செயற்படும். அத்துடன் அதிதீவிர சிகிச்சை நோயாளர்கள் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மேற்படி மூன்று நாட்களும் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் மு.ப. 8.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரையான மட்டுப்படுத்தப்பட்ட சேவையே இடம்பெறும். முதலாம் திகதி தொடக்கம் புதிய நோயாளர் அனுமதிகள் நிரந்தர கட்டிடத்தில் வழமைபோல இடம் பெறும்.

இந் நாட்களில் நோயாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக மனம் வருந்துகின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பா)

# யாழ்.கல்வி வலயத்தில் நாளை கூட்டம்

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களுக்கான கூட்டம் நாளை 26 ஆந் திகதி காலை 9 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் இடம்பெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா அறிவித்துள்ளார். (ரு)


## சேவை முகவர்

காணிகள், வீடு விற்பனைக்கு

மணல்தறை லேன், பழம் வீதி, முதலாம் குறுக்குத்தெரு, நாயன்மார் வீதி, அரசடி வீதி, பலாலி வீதி 6ம் லேன், யாழ். நல்லூர் பகுதியில் விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

சுந்தரம்: 0212229177, 0774819801 (7032)

## வாழும் கலை பயிற்சி



மூச்சுப்பயிற்சி, பிரணாயாமம், சுதர்சனகிரியா, யோகா

அறிமுகமுறை 26.12.2011 5 மணி

இடம்: மகேஸ்வரன் மணிமண்டபம்

பயிற்சி: 27.12.2011 - 1.1.2012 வரை

நேரம் : 2 மணிமுதல் 4.30
5 மணிமுதல் 7.30
7.30 மணிமுதல் 9.00

தொடர்பு:- 0777740593

வடமராட்சி பதிவுகட்கு
சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
நெல்லியடி.
தென்மராட்சி பதிவுகட்கு
0777078349

(7025)

## ஆண்மைக்குறைவா? குழந்தையின்மையா? எயிட்ஸ் நோய் முழுமையாக குணமாகும் அதிசயம்!

23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின் சாதனைகள்



உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை

பெண்களுக்கான மாதப்பிரச்சனை,
கருமுட்டை உற்பத்தியின்மை,
வளர்ச்சியின்மையால் பாதிப்பா?

தாம்பத்தியக் குறைபாடா?



கவலை வேண்டாம்.

தூக்கத்தில் சக்தி வெளியாதல், விரைவில் வெளியாதல், தன்னால் முடியாமல் என்ற பயமா? திருமணத்துக்கு தயாராகும் வாலிபர்களே இந்தப் பயத்திலிருந்து விடுபட்டு 45 நாட்களில் முழு ஆண்மையும் பெற்று முழுமையான வளர்ச்சியில் நீண்ட நேரம் இன்பம் பெறுவது உறுதி. எந்த வயதினராலும் சரி எந்த நிலையில் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி பலன் பெறுவது உறுதி.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். (பெண்கள் மட்டும்)

செல்: 0091 9842457673

100% உறுதி

மேலும் சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

டாக்டரின் நேரடி பேட்டியை விஜய் ரீவீ, ராஜ் ரீவீ, தமிழன் ரீவீயில் காணலாம்.

1.12.2011ல் DAN TVயில் இடம் பெற்ற இன்றைய பிரமுகர் நிகழ்ச்சியில் டாக்டரின் நேரடிப் பேட்டியை www.dantv.tvயில் காணலாம்.

Website: www.Sexualproblem.in

செல் : 0091 9600336009



Email: sridevisiddha@gmail.com

இலங்கை செல்: 0754 518 639

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமபுரம், சென்னை-89, இந்தியா.

APGraphic

## தொடர்பு கொள்ளவும்

**Western Mobile** No.9, New Market
(மேல்மாடி) யாழ்ப்பாணம். T.P.:0770530370

என்னும் எமது Mobile ஸ்தாபனத்தில் பழுதுபார்ப்பதற்கு OR வேறு ஏதேனும் தேவைகளிற்காக எம்மிடம் Mobileகள் கொடுக்கப்பட்டிருந்தால் ஜனவரி 30-ந் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (7027)

## சிறுப்பிட்டியில் நாளை ஆட்சேர்ப்பு

உணவு கையாளும் உற்பத்தி- குளிர்பான தயாரிப்புக்கு ஆண் - பெண் ஆகிய இரு பாலாரிடமும் இருந்து வேலைக்கு உடன் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

நேர்முக தேர்வுக்கு (26.12.2011 -திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் இடம்பெறும்) வருகை தரவுள்ளோர் இராசபாதை வீதியில், சிறுப்பிட்டி மேற்கு, ஞானவைரவர் ஆலயத்திற்கு அருகில் சமுகமளிக்கவும்.

தொலைபேசி: 0779594326 (சி-5319)

# இலங்கை–ஈரான் உறவுகள் சிறப்பாக பேணப்பட வேண்டும்

## ஹக்கீமிடம் ஈரான் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இன்றைய அரசியல் சூழ்நிலையில் நாட்டின் முன்னேற்றம் கருதியும் சமூகத்தின் ஒற்றுமை கருதியும் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு கருதியும் முக்கிய அம்சங்களில் கருத்தொருமைப்பாட்டுடன் இந்நாட்டின் முஸ்லிம் கட்சிகள் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கான முயற்சிகள் ஆரம்பித்து விட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தன்னை சந்தித்த ஈரானிய தூதுவரிடம் தெரிவித்தார்.

இந்த நாட்டு முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு செயலாற்றக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றி சீர்தூக்கிப் பார்க்க முடியுமா என ஈரானியத் தூதுவர் எழுப்பிய கேள்விக்கு பதிலாகவே இலங்கையின் பிரதான முஸ்லிம் கட்சியின் தலைவரான அமைச்சர் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கான ஈரானிய இஸ்லாமிய குடியரசின் புதிய தூதுவர் கலாநிதி எம்.என். ஹஸ்ஸானி பூர் அமைச்சர் ஹக்கீமை அவரது இல்லத்தில் அண்மையில் சென்று சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆரம்பத்தில் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையே நீண்ட காலமாக நிலவிவரும் நல்லுறவு பற்றி நினைவூட்டிய ஈரானியத் தூதுவர் இன்றுள்ள சூழ்நிலையில் அதனை மேலும் சிறப்பாக பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இலங்கை சிறைச்சாலைகளில் உள்ள பத்து ஈரானிய கைதிகள் பற்றி குறிப்பிட்ட ஈரானியத் தூதுவர், அவர்கள் இழைத்ததாக கூறப்படும் குற்றங்கள் விடயத்தில் உரிய கவனம் செலுத்தி அடையாள ரீதியாக குறைவான குற்றம் இழைத்தவர்களாக தென்படும் ஓரிருவரை யாவது நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்க முடியுமா என கேட்ட போது நீதியமைச்சர் ஹக்கீம் உயர் அதிகாரிகளு டன் கலந்தாலோசித்து தாம் அதுபற்றி தீர்மானத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றார்.

சிறைக் கைதிகளை பரிமாறிக்கொள்வது சம்பந்தமாகவும் அதற்கான ஓர் இருதரப்பு உடன்படிக்கை சம்பந்தமாகவும் பேசப்பட்டது. அத்துடன் ஆறு மாதங்கள் உள்நாட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்களை அவர்களின் குற்றங்களுக்கு ஏற்ப பின்னர் உரிய நாடுகளின் சிறைகளுக்கு இடமாற்றம் செய்வதற்காக அந்நாடுகளுக்கு கையளிப்பது பற்றி தாம் ஆலோசிப்பதாகவும் அது குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதாகவும் நீதியமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் எவ்வாறான குற்றச் செயல்கள் அதிகளவில் இழைக்கப்படுகின்றன என ஈரானிய தூதுவர் வினவியபோது, கொலை, கொள்ளை,கற்பழிப்பு சம்பவங்கள் அதிகமாக நிகழ்ந்தபோதிலும் அண்மைக்காலமாக அவ்வாறான சம்பவங்களில் வீழ்ச்சி காணப்படுவதாக நீதியமைச்சர் கூறினார். கணனி, இணையம் தொடர்பான குற்றங்களும் ஏனைய நாடுகள் போன்று இங்கும் இழைக்கப்படுவதாக கூறிய அவர் அவை தொடர்பான சட்டங்கள் இயற்றப்படுவதாகவும் கூறினார்.

அத்துடன் போதைப்பொருள் பாவனைக்கு பெரும்பாலும் சேரிப்புற இளைஞர், யுவதிகள் அடிமையாகி இருப்பதாகவும் அதனோடு தொடர்பான குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் கூறியபோது, பொதுவாக எந்தவிதமான குற்றங்களுக்கும் அவற்றுக்கான தண்டனை பற்றி தெளிவாக அறிவுறுத்தப்பட்டால் அவற்றை தடுக்கவும் குறைக்கவும் முடியுமென தூதுவர் கூறினார்.

ஈரான் போன்ற இஸ்லாமிய நாடுகளில் குற்றச் செயல்களில் வீழ்ச்சி காணப்படுவதற்கான முக்கிய காரணம் அவற்றுக்கான கடுமையான சட்டங்களும் அது பற்றிய பொது மக்களுக்கான தண்டனை குறித்து அறிவுறுத்தலும் தெளிவுமாகும் என தூதுவர் ஹஸ்ஸானி பூர் மேலும் தெரிவித்தார். (அ-2)

நத்தார் திருநாளில் இல்லங்களில் இன்ப ஒளி வீசட்டும்

Peninsula Super Mall

Super Market Services

சகல பொருட்களையும் ஒரு கூரையின் கீழ் ஒரே நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

PSM



2000/- தொகைக்கு பொருட்களை கொள்வனவு செய்யும் அதிஷ்ரசாலிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன

வகை வகையான தரமான அனைத்து பொருள்களை பெற்றிட இன்றே நாடுங்கள்...

Parking Facility Available

PSM

No: 127, Kandy Road,
Kachcheri,
Jaffna.
021 222 1848
psmjaffna@gmail.com

பொதி செய்யப்பட்ட பலசரக்கு பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்
பால்மா வகைகள்
ஐஸ் கிறிம் வகைகள்
குளிர்பானங்கள்
பழ வகைகள்
பழ ரசங்கள்
இறைச்சி வகைகள்,
அன்பளிப்பு பொருட்கள்
கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துமடல்கள்
கேக் தயாரிக்கும் பொருட்கள்

நத்தார் தின வாழ்த்துக்கள்

KALAIMAGAL INTERNATIONAL COLLEGE

NOTHING IS IMPOSSIBLE

KALAIMAGAL International College

இலங்கை கல்வித்துறையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ளும் மாணவர்கள் செறிந்து வாழும் வட பகுதியில் சர்வதேச மொழியான ஆங்கிலத்தின் புலமை சுமார் 25 வருடங்களாகத் தொலைக்கப்பட்ட அல்லது அக்கறை கொள்ளாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

இன்றைய உலகமயமாக்கலில் ஆங்கில அறிவு மிக மிக இன்றியமையாததாகக் காணப்படுவதனால் ஆங்கில மொழி மூலக் கல்வியின் அவசியம் காலத்தின் கட்டாயமாகும். இதனைக் கருத்திற்கொண்டு எமது கல்லூரி வட பகுதியில் ஆங்கிலமொழி மூலக் கல்வியை உள்வாங்கும் பொருட்டு பல இடங்களில் தனது கிளைகளை நிறுவியுள்ளது. எமது கலைமகள் சர்வதேச கல்லூரியின் சிறப்பான செயற்றிட்டங்கள் வருமாறு:

- பாலர் வகுப்பு முதல் க.பொ.த. (உ/த) வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட முழுநேர தனியார் பாடசாலை ( English Medium )
- சிறந்த ஆங்கில மொழி மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.
- சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- பிரத்தியேக சீருடை
- சாதாரண மக்கள் முகம்கொடுக்கக்கூடிய மிகக் குறைந்த அளவு கட்டண வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழி மூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலம் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் கற்பிக்கும் கல்விக் கொள்கை.
- அரச பாடசாலைகளின் நேரசூசி அமைப்பு.
- விளையாட்டு, கலை, கலாசாரம் நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடுகளாக உள்வாங்கும் கல்விக்கொள்கை.
- மாணவர்களை உற்சாகப்படுத்தும் வருடாந்த பரிசளிப்பும், கலைவிழாக்களும்.



(அ-5302)

அனுமதிக்கு இன்றே முந்துங்கள்

மேலதிக விபரங்களுக்கு எமது தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்:

KALAIMAGAL International College

CHURCH LANE, KOKUVIL EAST, KOKUVIL.

T.P.:021 4923235, 0778834592, 0774904286, 0776548283

KALAIMAGAL INTERNATIONAL COLLEGE

NOTHING IS IMPOSSIBLE

## கலந்துரையாடல்

யாழ். மாநகரசபையால் நடத்தப்படும் மக்கள் பங்கேற்புடனான மக்கள் தேவைகள் தொடர்பான கிராம அபிவிருத்தித் திட்டமிடல் கூட்டம் ஜே/93 கிராம சேவையாளர் பிரிவில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். அரியாலை சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, மேற்குறிப்பிடப்பட்ட பிரதேச வாழ் மக்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான தேவைகளை வழங்குமாறு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா அறிவித்துள்ளார். (அ)

## தீவகக் கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

தீவகக்கல்வி வலயத்தில் காரைநகர் கல்விக் கோட்டத்தில் யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை, யா/காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளன.

இப்பதவிக்குத் தீவகக்கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை தரம்-I தரம்- 2-I இனைச் சேர்ந்த தீவகக்கல்வி வலய ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.

எனவே, விண்ணப்பப்படிவங்களை தீவகக்கல்வி வலயத்தில் அல்லது காரைநகர் கோட்டக்கல்வி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். (அ)

## வர்த்தக நிலையங்கள் திடீர் சோதனை

கிளிநொச்சி நகர வர்த்தக நிலையங்கள் மீது கொழும்பு விலைக்கட்டுப்பாட்டுச் சபையினர், கிளிநொச்சி மாவட்ட விலைக்கட்டுப்பாட்டுச் சபையினர் ஆகியோர் கடந்த 22 ஆம் திகதி திடீர் பரிசோதனை மேற்கொண்டுள்ளனர். இதில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, பொருட்களில் விலை பொறித்து விற்பனை செய்யாமை மற்றும் பொறிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக பொருட்களை விற்பனை செய்தமை, நிறை குறைவாக செய்தமை ஆகிய குற்றச்சாட்டின் பேரில் வர்த்தகர்கள் சிக்கிக் கொண்டனர்.

இதில் கரடிபோக்கு சந்தியில் உள்ள 4 விற்பனை நிலைய வர்த்தகர்கள் பொறிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக பொருட்களை விற்பனை செய்தமை,விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை ஆகிய குற்றச்சாட்டில் சிக்கிக் கொண்டனர். இச்சம்பவம் அன்றையதினம் வர்த்தகர்கள் மீது பரபரப்பை ஏற்படுத்தியது. (அ-3-15)

## யுத்தத்தினால் உடலில் சன்னங்களையுடைய மாணவர்களின் விபரம் கோரப்பட்டுள்ளது

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களில் கடந்த கால யுத்த நடவடிக்கைகளின் போது காயமுற்று உடலில் உலோக துண்டுகள், துப்பாக்கிச் சன்னங்கள் இருப்பவர்களும் முள்ளந்தண்டில் காயமுற்று இயங்க முடியாது இருப்பவர்களும் மற்றும் சிறப்பு சிகிச்சை தேவைப்படும் மாணவர்களின் விபரங்கள் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் கோரப்பட்டுள்ளது.

இவ்விபரங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, பாடசாலை அதிபர்கள் தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள மாதிரி படிவங்களை உடன் பூர்த்தி செய்து துணுக்காய் வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு துணுக்காய் கல்வி வலய மாணவர் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி அறிவித்துள்ளார். (அ-3-15)

## இராசி பலன்

25.12.2011

(மார்கழி 09, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு

பிரதமை முன்னிரவு 10.56 மணிவரை

மூலம் முற்பகல் 8.49 மணிவரை

இராகுகாலம் 4.56-6.26 மணிவரை

சுபநேரம் 9.26-10.56 மணிவரை

இயேசு பாலன் பிறப்பு பெருவிழா.

**மேடம்** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்,தொழில் ரீதியாக ஏற்பட்ட மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள், நிலபுலன்களால் நன்மையுண்டு, திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**இடபம்** ஆதவன் வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்,அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வெளியூர் பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**மிதுனம்** உற்றார்,உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்,விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர்,பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்,ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**கடகம்** தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், கூட்டுத் தொழிலில் பங்குதாரரின் ஒத்துழைப்பு கிடைக்கும், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம்.

**சிங்கம்** சிறப்பான நாள்,சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்,பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், பூர்வ புண்ணிய கருமங்களில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி** பக்குவமாக நடந்துகொண்டு பாராட்டுப் பெறும் நாள்,பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்,வாகன பழுதுகள் மாறும்,மங்கலச் செய்திகள் வந்து சேரும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**துலாம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனைகள் படைக்கும் நாள்,எடுத்த காரியத்தை முடிக்க சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும்,சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும்.

**விருச்சிகம்** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்,தொழில் வளர்ச்சிக்கு தொகை வந்து சேரும்,உறவினர் வருகையுண்டு,மங்கலச் செய்திகள் வந்து சேரலாம்,தனவரவு திருப்திகரமாக அமையும்.

**தனுசு** ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை,சிலரது தேவைக்காக இரவு, பகலாக பாடுபடும் சூழ்நிலை அமையலாம், சிந்தனை மிகுதியான நாள்,சுப செலவுகள் செய்து மகிழும் நாள்.

**மகரம்** வைராக்கியத்தோடு செயற்பட்டு வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள்,அதிக அலைச்சல்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு,பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கும்பம்** பண வரவால் சந்தோசமடைவீர்கள், தொலைபேசி மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம்,தொழிலில் புதிய கூட்டாளிகளை இணைக்கும் எண்ணம் உருவாகலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும்.

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும்,வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம்,அதிகாரத்துடன் செயற்படுவீர்கள்,உற்சாகமான நாள்.

வளவன்

## வாரம் ஒரு தகவல்

## இரவல் பேனா

"சேர்! ஒரு நிமிடம் உங்களுடைய பேனாவை என்னிடம் தரமுடியுமா?"

"ஆம்!" என்று கொடுத்தார்.

"என்ன இது...? மூடியைக் கழற்றிவிட்டு பேனாவை மட்டும் தருகிறீர்கள்?"

"அது என்னுடைய பழக்கம்"

"ஜப்பான் நாட்டில் ஒரு புதுவிதமான பேனா சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளது. கேள்விப்பட்டீர்களா?"

"இல்லையே"

"அது எப்படி என்றால், பேனாவின் மேல் பக்கத்தில் வட்டவடிவமான அளவில் ஒரு சிறிய விசிறி... மாதிரி செய்யப்பட்டு அது பற்றரியின் துணையுடன் இயங்குகிறது"

"எதற்காக அப்படி வடிவமைத்துள்ளார்கள்" என்று கேட்டார்.

"எழுதிக் கொண்டிருக்கும்போது அந்த மின்விசிறி சுற்றும்! அது சிகரெட் புகையை விரட்டி அடித்துவிடும். சிகரெட் புகையில்லாத காற்றை எழுதிக் கொண்டிருக்கின்ற நாம் சுவாசிக்க முடியும்"

"அதாவது அருகில் இருப்பவர்கள் சிகரெட் பிடித்தாலும் அந்தப் புகை நமது முகத்துக்கு நேராக வராமல் இருக்க இது காப்பாற்றும்!"

"ஆம்!"

"நமது நாட்டுக்கு இது மிகவும் அவசியம். ஏனென்றால், மற்றவர்களைப் பற்றி சிறிதேனும் சிந்திக்காமல் புகை பிடிப்பவர்கள் இங்குதான் அதிகமாக இருக்கிறார்கள்"

"அது மட்டுமல்ல! பேனாவை இரவல் வாங்கினாலும் அதை அப்படியே எடுத்துக்கொண்டு போகிறவர்களும் இருக்கிறார்கள். அதனால்தான் நான் எப்போதும் முன் ஆயத்தமாக பேனாவின் மூடியைக் கழற்றி விட்டு பேனாவை மட்டும் கேட்பவர்களுக்கு கொடுப்பேன். அதனால், இப்போது என்ன நடந்தது தெரியுமா?"

"இதுவரைக்கும் 234 பேனா மூடி என்னிடம் சேர்ந்து இருக்கிறது" என்றார்.

தென்கச்சிகோ.சுவாமிநாதன்

## விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் 2011/30 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய இலங்கை ஆசிரியர் சேவையில் பதவி உயர்விற்கு தீவக கல்வி வலய ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் பதவி உயர்விற்கான விண்ணப்பத்தினையும் ஏனைய ஆவணங்களையும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தீவக கல்வி வலயத்தில் சமர்ப்பிக்குமாறு தீவக கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். (அ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 65 | 60-100 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 280 |
| தக்காளி | 160 | 240 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 80 | 100 | 90 |
| கரட் | 80 | 140 | 90 |
| பூசணி | 65 | 70 | 60 |
| புடோல் | 50-60 | 100 | 70 |
| வாழைக்காய் | 40-45 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 65 | 90 | 70 |
| பாகற்காய் | 110 | 200 | 150 |
| வெண்டிக்காய் | 70 | 100 | 60 |
| கரணைக்கிழங்கு | -- | 70 | 60 |
| பயற்றங்காய் | 160 | 160 | 120 |
| லீக்ஸ் | 50 | 80 | 60 |
| பீற்றூட் | 80-90 | 140 | 140 |
| கறிமிளகாய் | 160 | 200 | 160 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 90 | 140 | 120 |
| கத்தரி தம்புள்ள | 80 | 80 | 40 |
| கீரை – 1 பிடி | 15-25 | 40 | 20 |
| தேசிக்காய் | 80-90 | 120 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 15-20 | 25 | 25 |

# முதுகல்விமாணி பட்டப்படிப்பிற்கு தெரிவுசெய்யப்பட்டோரின் பெயர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2011/2012 கல்வியாண்டில் முதுகல்விமாணிப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக 103 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பட்டப்பின் படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான கற்கைநெறி 2012 ஜனவரி மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளது.

தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர் விப ரம் வருமாறு,

ஜே.அப்டீன், ஏ.அமலேஸ்வரன், திருமதி எஸ். அம்பிகை, திருமதி எஸ். ஆனந்தவனிதை, எம். அரவிந்தன், எம். அரிபூரணநாதன், செல்வி ஏ.அருளாம்பிகை, வி. அருணா கரன், ஆர். பாலச்சந்திரன்,பி. பாலகுமார், பி.பாலகுமார், செல்வி.ஏ.தயாளினி, பி.கணே சன், வி. கஸ்ரன் றோய், செல்வி. ரி.கிரேஸ் தேவதயாளினி, எஸ். இளங்கோ, திருமதி ஐ.இந்திராணி, திருமதி ஏ.இந்திராதேவி,எஸ். இன்பகுமார் குரூஸ், திருமதி கே.ஜீவாஜினி, ஏ.அல்மேடா ஜெரால்ட், திருமதி எம்.ஜெய லக்சுமி,

திருமதி கே.ஜெயரஞ்சி, எஸ். கஜேந்திரன், திருமதி கே.கலாரஜனி, பி.கமலதாசன், கே.கண்ணன்,. என்.கந்தவனச் செல்வன், அருட்சகோதரர் எல்.கிருபைரத்னம், எஸ்.கோடீஸ்வரன்

திருமதி எல்.லலிதா, திருமதி எம். லோக தர்சினி, திருமதி எம்.லுட்விகா,ரி.மகிந்தன், இ.மகாதேவன்,ஆர். மகேந்திரன், கே.மகிந் தன்,திருமதி எஸ்.மங்களேஸ்வரி, அருட்சகோ தரி மரியா றொசாரியோ, திருமதி ஜே.மேரி மக்டலின், எஸ்.மதனமோகனராஜா, திருமதி எம்.மதிவதனி, எஸ்.மொஹமட் ரஜீஸ், கே. மொஹமட் அனீஸ்,ரி.மோகனராஜா, எம்.மோக னேந்திரன்,

ஆர். நித்தியானந்தன், ஏ.பங்கயற் செல்வன், திருமதி ரி.பிரபாலினி, திருமதி எம்.பிரேமா, திருமதி எஸ்.ராகினி, கே.ராஜ துரை, செல்வி ரி.ராஜமனோகரி, திருமதி பி.ரஜனி, ரி.ராமதாஸ், எம்.செரீப் ரம்ஸீன், செல்வி.எஸ்.ரஞ்சினி, வி.ரவிகரன், திருமதி ஆர்.ரேணுகா, திருமதி கே.றோகினி,

அருட்சகோதரி வி.சகாயநாயகி, பி.சர்வா னந்தன்,எஸ்.செல்வகுமார்,அன்ரனி யூட் செல்வராஜன் லம்பேட், வி.சேந்தன், ஜி. சண் முககுமார்,திருமதி ஈ.சசிகலா, ரி. சிவஞா னம்ஸ், எம்.சிவஞானஜோதி, கே.சிவகுமார ன், எம்.சிவநந்தன், எஸ். சிவராசா, என்.சிவ சங்கரசர்மா, கே.சிவசுப்பிரமணியம், எஸ்.ஸ்ரீத ரன், திருமதி ரி.சுபதினி, ஆர். சுப்ரமணியம், திருமதி வி.சுகந்தினி, திருமதி பி.சுகிர்தா, திருமதி பி.சுஜாத்தா,திருமதி ஜே.சுசீலா, திரு மதி ஜி.சுசீலாதேவி,எஸ்.சுதர்சன், கே.தர்மஜீ லன், எஸ். தர்மதாஸ், எஸ்.தயாகரன், ஜி.திரு மாலழகன், திருமதி வை.தியாகசோதி, எஸ்.துரைரட்ணம்,

எஸ்.உமாச்சந்திரன், திருமதி என்.உதய லதா, வி.வசந்தகுமார், திருமதி கே.வசந்த குமாரி, செல்வி கே.வசந்தமலர், ரி.வசந்தன், திருமதி ரி.வாசுகி,கே.வெண்ணிலா, திருமதி எஸ்.வெண் ணிலா, செல்வி ரி.விஜிதா, திருமதி ஆர்.விஜிதா, திருமதி வி.வினோதா, எ.விநாயகமூர்த்தி, திருமதி எஸ். யசோதா

**காத்திருப்புப்பட்டியலில் உள்ளோர்...**

எஸ்.ஜெயனளந்தகுமார்,எஸ்.மொஹமட் ரிஸ்வி, எம்.சிவானந்தன், திருமதி ஆர்.அம் பிகைதர்சினி,எம்.ராசலிங்கம், திருமதி ரி.வசந்தி, ஆர்.தங்கராஜா, என்.வெனிஸ்கோ, ஆர்.முகமட் தாரிக்

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

(கொழும்பு)

கொஸ்கொட கணேகொட விகாரை வீதி யில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இளை ஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணி அளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு வர் இந்த துப்பாக்கி பிரயோகத்தை மேற் கொண்டுள்ளனர்.

சம்பவத்தில் 22 வயதான இளைஞ ஒரு வரே கொல்லப்பட்டதாகவும் அவரது சடலம் பலப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர். (அ-2)

# மாணவியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்ற குடும்பஸ்தர் கைது

## தாவடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தனியாக வீட்டில் இருந்த 16 வயதுடைய பாடசாலை மாணவியொருவரை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்த முயன்ற குடும் பஸ்தர் ஒருவரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ள சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

தாவடிப் பகுதியிலுள்ள வீடொன்றில் குறித்த மாணவி தனியாக இருந்த போது அவ் வீட்டிற்குள் புகுந்த குறித்த நபர் வீட்டின் கதவினைத் திறக்குமாறு மாணவியை பய முறுத்தியுள்ளார்.

அம்மாணவி கதவினைத் திறக்காததை யடுத்து கதவினைத்தள்ள முயற்சித் துள்ளார்.

இதையடுத்து சிறுமி கூக்குரலிட அயல வர்கள் குறித்த குடும்பஸ்தரை பிடித்து பொலி ஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குடும்பஸ்தர் யாழ்.நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


குறித்த சிறுமி மீது பாலியல் பலாத்காரம் முயற்சிக்கப்பட்டதே தவிர பாலியல் பலாத் காரத்திற்கு உட்படுத்தப்படவில்லையென்றும் குறித்த நபர் ஏற்கனவே திருமணமாகி ஒரு பிள்ளையின் தந்தையென்றும் யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-4)



# நத்தார் சிறப்பு மலர்

# 25.12.2011

## யாழ்.ஆயரின் நத்தார் செய்தி



ஆண்டவர் இயேசு கிறிஸ்து மனித மீட்பிற்காக பாலனாய் பிறந்த வரலாற்று நிகழ்ச்சியை ஒவ்வொரு மார்கழி மாதமும் 25ஆம் திகதி நினைவு கூர்ந்து உலகப் பண்டிகையாக மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழ்கின்றோம்.

நம் நாட்டிலும் யுத்தம் முடிவடைந்து மீள்குடியேற்றம் போன்ற மனித நேய செயல்களிலும் ஈடுபட்டு உடைந்து போன எமது குடும்ப வாழ்வை ஆன்மீக உளவள, பொருளாதார நிலைகளிலே உயர்த்துவதற்கு உழைத்து வருகின்றோம். இத் தருணத்தில் மனித உயிரின் மாண்பையும் மதிப்பையும் மனதில் கொண்டு இயேசு பாலனின் வருகையினால் உறுதி பெறுவோம்.


இன்று எம்மத்தியில் மனித உயிர்கள் மதிக்கப்படுவதில்லை. பெண்கள், சிறுவர்கள் உதாசீனம் செய்யப்பட்டு அநாதைகளாகவும், அபலைகளாகவும் தெருக்களில் அலைவதைக் காண்கின்றோம். இப்படிப்பட்ட சிலருக்கு அன்பு நேயத்துடன் பணிபுரியும் அன்னை திரேசாவின் துறவிகள் சபையின் மகத்தான சேவையை நினைத்து பாராட்ட வேண்டும்.

ஆனால் எம் நாட்டில் அண்மையில் இச்சபையினருக்கு நடந்த சம்பவம் மிகவும் வேதனைக்குரியது. நாம் எமது சுய விருப்பங்களை விடுத்து சமூகத்தில் கதியற்றவர்கள் மட்டில் கருணையுள்ளம் கொண்டு வாழ்வோம்.

கருணை பொங்கும் உள்ளம் கடவுள் வாழும் இல்லம் என்பதை நினைவில் கொள்வோம். பாலன் இயேசு பிறப்பின் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்து ஆசி கூறுகின்றேன்.

**மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,**
**யாழ். ஆயர் .**

## குருமுதல்வரின் நத்தார் செய்தி



"சாவின் இருளில் வாழ்ந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்"

இறைவாக்குநரின் இக்கூற்று மீட்புக்காக ஏங்கித் தவித்த, கைவிடப்பட்ட மக்களின் வழிகாட்டும் ஒளியாக கிறிஸ்துவின் பிறப்பு அமைந்ததை எடுத்துக்காட்டுகிறது. கைவிடப்பட்ட நிலையிலும் நம்பிக்கையிழந்த நிலையிலும் வாழ்ந்த மக்கள் தங்கள் மீட்பின் பாறையையும் எதிர்கால நம்பிக்கையின் நட்சத்திரத்தையும் கண்டனர்.

இன்று கிறிஸ்து பிறப்பின் பின் 2011 இல் வாழும் எம் வாழ்வியலின் சவால்கள் மக்களுக்கு அச்சுறுத்தலாக காணப்படுகின்றது. வழிகாட்டலுக்கான நட்சத்திரத்தையும் ஒடுக்குமுறைகள், அடக்குமுறைகள் ஆகியவற்றில் இருந்து மீட்பையும் அறிவிக்கும், கொடுக்கும் மேசியாவைத் தேடி அலைகின்றது.

பொருளாதார மேம்பாட்டுத்திட்டங்கள் ஒருபுறம், கவலைகள், துயரங்களை மறக்க களியாட்டங்கள் மறுபுறம், கையடக்க தொலைபேசிகளுடன் நவீனரக உந்துருளிகளுடன் வலம்வரும் இளைஞர் கூட்டம் இன்னொருபுறம் காணப்படும் சூழ்நிலையில் நாம் வாழ்கின்றோம் என்று அறியாமல் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

இறைவன் தான் எம்மைக்காக்கவேண்டும் என்று கூறிய வாக்கு இன்றும் அர்த்தமுள்ளதாக காணப்படுகின்றது. சிறையில் இருப்போருக்கு விடுதலையும் காணாமல் போனோரின் உறவுகளுக்கு ஆறுதலும் மீள்குடியேற்ற மக்களின் வாழ்வியலுக்கு சுபீட்சமும் சுரண்டல்களும் ஒழுக்கசீர்கேடுகளும் ஊழல் வன்முறை ஆகியவை நிறைந்துள்ள சமூகத்துக்கு விடிவையும் ஆண்டவர் அருள்வாராக. மீட்பர் கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியும் கிறிஸ்துவின் மானிடவியல் எம்வாழ்வுக்கு புதிய அர்த்தத்தை கொடுக்கத்தக்கதாக கிறிஸ்து பிறப்பின் விழா அமையட்டும். உங்கள் அனைவருக்கும் பாலகன் கிறிஸ்துவின் அமைதியும் சமாதானமும் மகிழ்ச்சியும் உரித்தாகட்டும்.

**இறைவன் பணியில்**
**செ.பி.நேசகுமார், யாழ். குருமுதல்வர், இலங்கைத் திருச்சபை.**

இனிய நத்தார் தின வாழ்த்துக்கள்
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்து
RAMCO CEMENT
ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்! உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!
ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்
- இலங்கையின் SLS 107 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
- 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
- மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
- ISO 9001 உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
ஐஸ்வர பகவான் அன் கம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 222 7603, 021 222 2350

உன்னதரின் பிறப்பால் உலகில் அனைவருக்கும் அமைதியைப் பெற வாழ்த்துகின்றோம்
L கிருபா லேணர்ஸ் L
(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை)
- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- தாம் விரும்பிய நேரங்களில் வாகன பயிற்சி வழங்கப்படும்.
பெண்களுக்கு: நவீன காரில் பயிற்சி வழங்கப்படும் 021 492 3200 (கவிதா)
தலைமைக் காரியாலயம்:- 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:- 021 222 4353
கிளை :- கிளிநொச்சி T.P:- 021 228 5505
கிளை :- நெல்லியடி T.P:- 021 300 6550
கிளை :- விசுவமடு T.P:- 021 320 1515
கிளை :- A-9 வீதி, சாவகச்சேரி T.P:- 021 492 3202, 021 320 1818

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் விட்டுக்கொடுப்பு அவசியம்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் அரசாங்கம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனேயே பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்மானத்துக்கு வரவேண்டும்.

அதனைவிடுத்து அவசர அவசரமாக கருத்துக்களை வெளியிடுவதாலோ ஏனைய கட்சிகளுடன் பேசுவதன் மூலமோ எதிர்பார்க்கின்ற பலாபலன்களை பெற்றுக்கொள்ள முடியாது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம் அதனை நடைமுறைப்படுத்துவதே அரசாங்கத்திற்கும் அதேநேரம் எமது நாட்டுக்கும் நன்மையைப் பயப்பதாக அமையும் எனவும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தேசிய இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக அரசாங்கமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவந்தமை வரவேற்கத்தக்கது. எனினும் இந்தப் பேச்சுக்களில் முன்னேற்றங்களுக்கு பதிலாக அது பின்னோக்கி சென்று கொண்டிருப்பது தெளிவாகின்றது. இருதரப்பினரதும் நிலைப்பாடுகளை எடுத்து நோக்கும் போது இந்தப் பேச்சுவார்த்தை பயணமானது கேள்விக்குறியை எதிர்நோக்கியுள்ளது என்றே கூறத்தோன்றுகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சியை பொறுத்தவரையில் பேச்சுவார்த்தைகளின் மூலமே எந்தவொரு விடயத்துக்கும் தீர்வினை முன்வைக்க முடியும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றது.

அந்தவகையில்தான் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தையும் பார்க்கின்றது. இதனை தொடர்ச்சியாக வலியுறுத்தியும் வருகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலும் அரசாங்கமாக இருந்தாலும் விட்டுக்கொடுப்புக்கள் மிகமிக அவசியமானவை. இதனை இருதரப்பினரும் கடைப்பிடிக்க தவறுகின்றனர். எதிர்க்கட்சி என்ற வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எமக்கு எந்தவித ஒத்துழைப்புக்களையும் வழங்குவதில்லை என்பது ஒருபுறம் இருந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை கருத்திற்கொண்டு ஐக்கிய தேசியக்கட்சி தமது முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றது என அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## 2012 ஆம் ஆண்டிற்கான மாணவர்களை இணைத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான பதிவுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ,10 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதோடு பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட தினத்திலிருந்தே வகுப்புகள் ஆரம்பமாகும் என பீடாதிபதி எஸ்.யோகநாதன் அறிவித்துள்ளார்.

இதில் ஆரம்பக்கல்வி தமிழ்மொழி மூலமான கணிதம், விஞ்ஞானம், ஆங்கில மொழி மூலமான விஞ்ஞானம், கணிதம், சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் மற்றும் விசேட கல்வி ஆகிய துறைகளுக்கான கற்கை நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ)

## சிறிகொத்தாவை புனரமைப்பதற்கு நிதி திரட்டப்படுகிறது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவை புனரமைப்பதற்கு நிதி திரட்டப்படுகின்றது.

கட்சியின் முக்கிய பொறுப்புக்களுக்காக அண்மையில் நடைபெற்ற வாக்கெடுப்பின் போது கட்சித் தலைமையகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தினால் கட்சியின் தலைமையகத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தாவை பழுது பார்ப்பதற்கு எவ்வாறு பங்களிப்பு செய்ய முடியும் என கட்சி ஆதரவாளர்கள் வினவி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக அம்பலாங்கொடையிலிருந்து கொழும்பு வந்த தந்தையும் மகளும் சிறிகொத்தா புனரமைப்பு பணிக்காக நிதி உதவிகளை வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# கிளி. வலயத்தில் சம்பள நிலுவை பெற தெரிவான ஆசிரியர்களின் விபரம்

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத் தில் சம்பள நிலுவைகள் பெறவுள்ள ஆசிரியர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சம் பள நிலுவைகளை கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலக நிதிக்கிளையில் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ளலாம் என கணக்காளர் ஏ.கிரிதரன் அறிவித்துள்ளார். சம்பள நிலுவை பெறவுள்ளவர்களின் விபரம் வருமாறு,

என். குகதாசன் (கிளி/ அக்கராயன் அ.த.க.பா), திருமதி என். சிவநந்தன் (கிளி/ அக்கராயன் ம. வி),ஆர். விஜயலக்ஷ்மி (கிளி/ அக்கராயன் ம. வி), என். ரஞ்ஜினிதேவி (கிளி/ அக்கராயன் ம.வி), திருமதி ரி.சண்முகானந்தம் (கிளி / அழகபுரி வித்தி.), திருமதி எஸ். ஜெயகாந்தன் (கிளி/ பாரதி வித்தி.), எஸ். பிரசாந்தன் (கிளி இந்துக் கல்லூரி), கே. அனுசா (கிளி/ இயக்கச்சி அ.த.க.பா), பி. வாசுதேவன் (கிளி/ ஜெயபுரம் ம.வி), என். ஜெயதேவி (கிளி/ கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா.), திருமதி பி. சிவேஸ்வரன் (கிளி/ கனகபுரம் ம.வி.), திருமதி ஏ. சிவானந்தன் (கிளி/ கண்டாவளை ம.வி), திருமதி கே. திலகராஜா (கிளி/ கண்டாவளை ம.வி), திருமதி எஸ். ரூபகாந்தன் (கிளி/ கண்டாவளை ம.வி), எஸ். சிவசோதிமலர் (கிளி /கண்டாவளை ம.வி), ஆர். கஜமுகன் (கிளி/ கண்டாவளை ம.வி), ரி. உதயசூரியன் (கிளி/ கண்டாவளை ம.வி), திருமதி ரி. சதானந்தம் (கிளி/ மத்திய கல்லூரி), திருமதி யு. செல்வரட்ணம் (கிளி/மத்திய கல்லூரி), திருமதி வி.சிவகருணாகரன் (கிளி/ ம.வி), திருமதி ஏ. கிருஸ்ணமூர்த்தி (கிளி/ கோவில்வயல் சி.சி.த.க.பா.), திருமதி எஸ்.சாந்தகுமார் (கிளி/ கோவில் வயல் சி.சி. த.க.பா.), எஸ். ஈஸ்வரன் (கிளி/ குமாரசாமிபுரம் அ.த. க.பா.), திருமதி எஸ். பாலகிருஷ்ணன் (கிளி/ குமாரசாமிபுரம் அ.த.க.பா.),

எம்.நாகராஜன் (கிளி/குமுழமுனை ம.வி), என். நவன்ஜன் (கிளி/ மாசர் அ.த.க.பா.), திருமதி ஜி.ஜெயரத்தினம் (கிளி/ மாசர் அ.த. க.பா.), எஸ். செல்வரத்தினம் (கிளி/ முழங்காவில் ம.வி.), திருமதி ஜே. பாஸ்கரராஜ் (கிளி/ முழங்காவில் ம.வி.), திருமதி ரி. ரவிச்சந்திரன் (கிளி/ முரசுமோட்டை அ.த.க.பா), திருமதி கே. பாலச்சந்திரன் (கிளி/ முருகானந்தா ம.வி), திருமதி எம்.சுகந்தன் (கிளி/ முருகானந்தா ம.வி), திருமதி எஸ். ஜோதீஸ்வரன் (கிளி/ முருகானந்தா ம.வி), கே. அனந்தகோபன் (கிளி/ முருகானந்தா ம.வி), எம். ராகுலன் (கிளி/ முருகானந்தா ம.வி), வி.செல்வக்குமார் (கிளி/முருகானந்தா ம.வி), ஆர்.முகுந்தன் (கிளி/முருகானந்தா ம.வி),

திருமதி எஸ். சுவேந்திரன் (கிளி/முருகானந்தா ம.வி), திருமதி கே.மகேந்திரன் (கிளி/ நாகேந்திரா வித்தி), திருமதி எம்.ரசிகரன் (கிளி/ நாகேந்திரா வித்தி), எஸ்.நந்தகுமார் (கிளி/ நாகேந்திரா வித்தி), திருமதி எஸ்.நவீஸ்வரன் (கிளி/நாகேஸ்வரா வித்தி), திருமதி கே.ஜெயசிறி (கிளி/ஒட்டுப்புலம் அரசினர் தமிழ் கலவன் பா), ஆர்.ரேவதி (கிளி/பளை மத்திய கல்லூரி), எஸ்.யோகதாஸ் (கிளி/பளை மத்திய கல்லூரி), கே.குணபாலசிங்கம் (கிளி/பளை மத்திய கல்லூரி), திருமதி பி.அருள் நேசராசா (கிளி/பளை மத்திய கல்லூரி), வி. சிவநேசன் (கிளி/பளை றோ.க.த. க.பா), எஸ். நவகாந்தன் (கிளி/பளை றோ.க.த.க. பா), என்.சிவநேசர் (கிளி/பரந்தன் இ.ம.வி), திருமதி கே.கிளின்ரஸ் (கிளி/பரந்தன் இ.ம. வி),வி. பகவதி (கிளி/பரந்தன் இ.ம. வி), எஸ்.ராஜரட்ணம் (கிளி/பரந்தன் இ.ம.வி), திருமதி எம்.ஆர். ரவீந்திரராஜ் (கிளி/பரந்தன் இ.ம.வி), எஸ். சிவதாசன் (கிளி/பரந்தன் இ.ம.வி), திருமதி ஜே.மகேந்திரன் (கிளி/பரந்தன் இ.ம. வி), கே. புஸ்பராசா (கிளி/ பரந்தன் இ.ம.வி), எஸ்.ஆறுமுகம் (கிளி/பிரமந்தனாறு ம.வி), ரி.பதுமினி (கிளி/புன்னைநீராவி அ.த.க.பா), ரி.சுரேந்திரன் (கிளி/இராமநாதபுரம் கிழக்கு), திருமதி ஜே.பி. ஜஸ்ரின் (கிளி/இராமநாதபுரம் கிழக்கு), ரி.நிகேதரன் (கிளி/ இராமநாதபுரம் கிழக்கு), திரு மதி வி.விக்னேஸ்வ ரன்(கிளி/இராமநாதபுரம் கிழக்கு), கே.காசி லிங்கம்(கிளி/இராமநாதபுரம் கிழக்கு), பி.செல் வராஜ் (கிளி/இராமநாதபுரம் கிழக்கு), வி.தணி கைவேல் (கிளி/இராமநாதபுரம் கிழக்கு), கே.மனோகரன் (கிளி/இராமநாதபுரம் கிழக்கு), திருமதி ரி.சிவபாலன் (கிளி/இராமநாதபுரம் கிழக்கு),திருமதி எஸ்.சிவலோகநாதன் (கிளி/இராமநாதபுரம் ம.வி), திருமதி எஸ்.கலாதரன் (கிளி/இராமநாதபுரம் ம.வி), திருமதி கே.சிவனேஸ்வரன் (கிளி/இராமநாதபுரம் ம.வி), எம்.பிரதீஸ்(கிளி/இராமநாதபுரம் ம.வி), எஸ். திரவியம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு), எஸ்.இந்திரதாஸ் (கிளி/இராமநாதபுரம் மேற்கு), திருமதி ரி.நவகாந்தன்(கிளி/இராமநாதபுரம் மேற்கு), திருமதி எஸ்.வன்னியசிங்கம் (கிளி/ இராமநாதபுரம் மேற்கு), திருமதி எஸ்.ராஜேஸ்வரன் (கிளி/ஸ்கந்தபுரம் இல.2), திருமதி கே.சிவகுமார் (கிளி/சென். புனித அந்தோனிஸ் றோ. அ.த.க.பா), கே.சுதாகரன் (கிளி/ சென். புனித திரேசா மகளிர் கல்லூரி), திருமதி ஐ.கந்தசாமி (கிளி/தம்பிராசபுரம் அ.த.க.பா), திருமதி எம்.ஜெயசீலன் (கிளி/தர்மக்கேணி ம.த.க.பா), வி.யோகப்பிரகாஸ் (கிளி/ தர்மபுரம் ம.வி), பாலபத்மினிதேவி (கிளி/ தர்மபுரம் ம.வி), என்.பத்மநாதன்(கிளி/ தர்மபுரம் ம.வி), திருமதி கே.மதியழகன் (கிளி/ தர்மபுரம் இல.01), திருமதி ஆர்.அருணாசலம் (கிளி/உருத்திரபுரம் ம.வி), திருமதி எம். இதயசிவதாஸ் (கிளி/உருத்திரபுரம் ம.வி), திருமதி ஜே. விவேகானந்தராஜ் (கிளி/வட்டக்கச்சி ம.வி), திருமதி கே.பிரபாகரன் (கிளி/வட்டக்கச்சி ம.வி), திருமதி என்.ஜெயபாலசிங்கம் (கிளி/வட்டக்கச்சி ம.வி), எ.குமரகுருபரன் (கிளி/வட்டக்கச்சி ம.வி), எஸ்.விந்தன் (வலயக் கல்வி) (அ)

நத்தார் தின வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றோம்

SILVER SHIELD
ONE DOZEN
NYLON STRETCH SOCKS
100% NYLON SOCKS

நத்தார்- புதுவருடத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு
மாபெரும் விலைக் கழிவு

கடந்த 30 ஆண்டுகளாக யாழ். நகர் மக்களின் தரச்சிறப்புமிக்க காலுறைகள்(SOCKS)
SILVER SHIELD SOCKS

பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும், சிறியோர் முதல் பெரியோர் வரை, சகல தரத்திலும், சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ள

குறிப்பு:- பாடசாலைகளுக்கும்,
மொத்த வியாபாரிகளுக்கும்
மேலதிக கழிவு வழங்கப்படும்.

ஸ்ரீ முருகன்
303, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5392
(ஐ/5303)

# ஜனாதிபதியிடம் மன்னிப்பு கோரும் திட்டமில்லை

## அனோமா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தமது கணவருக்காக பொது மன்னிப்பு கோரும் திட்டமில்லை என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தாமோ குடும்ப உறுப்பினர்களோ ஜனாதிபதியிடம் பொதுமன்னிப்பு கோர விரும்பவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா விடுதலை தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்து தொடர்பில் பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குடும்ப உறுப்பினர் சரத் பொன்சேகாவின் சார்பில் மன்னிப்பு கோரினால் விடுதலை செய்வது குறித்து கவனம் செலுத்த முடியும் என அண்மையில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இவரை விடுதலை செய்வது குறித்து ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியமையை அனோமா ஒப்புக் கொண்டுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவதற்கு எவரும் மன்னிப்பு கோர வேண்டிய அவசியமில்லை என ட்ரான்பெரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பின் சட்ட நிபுணர் ஜே.சீ.வெலியமுன தெரிவித்துள்ளார். பொன்சேகா விடுதலை குறித்து கருத்து வெளியிட்ட ஜனாதிபதி அமெரிக்காவிடம் கோருவதை விட அவரது குடும்பம் என்னிடம் பொதுமன்னிப்பு கோரவேண்டும் என குறிப்பிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தவறுகளுக்கு எதிராக குரல் கொடுக்க பின்நிற்கமாட்டேன்

## சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட பதவிகளை அங்கீகரித்த போதிலும் தவறுகளுக்க எதிராக குரல் கொடுக்க பின்நிற்க போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் உள்ளிட்ட பிரதானிகளை தெரிவு செய்ய நடத்தப்பட்ட தேர்தல் ஜனநாயகம் மற்றும் நியாயமானதாக நடைபெறவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். செயற்குழுவில் அநீதியான நியமனங்கள் இருப்பதாகவும் அவை அனைத்தும் குறித்து தாம் குற்றம் சுமத்துவதாகவும் சேனசிங்க கூறியுள்ளார். தலைவர் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டாலும் தாம் அதனை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ள சேனசிங்க , தலைமைத்துவத்தினால் எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் கூறியுள்ளார். (அ-2)

# ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் . விடுப்பது ஐ.தே.கவின் பண்பல்ல

(கொழும்பு)

ஊடக நிறுவனங்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பது ஐக்கிய தேசியக் கட்சிக்கு உரிய பண்பு கிடையாது என கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடக சுதந்திரத்திற்காக குரல் கொடுக்கும் கட்சியாகவே ஐக்கிய தேசியக் கட்சி திகழ்ந்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக மஹாராஜா ஊடக வலையமைப்பு மீது கட்சியின் தலைமைத்துவம் பிரயோகிக்கும் அழுத்தங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

மஹாராஜா ஊடக வலையமைப்பின் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சவால்களுக்கு மத்தியில் நாட்டு மக்களுக்காக சேவையாற்றி வரும் ஊடக நிறுவனமொன்றிற்கு அச்சுறுத்தல் விடுப்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது என ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# ஜனாதிபதி நினைத்தால் எவரையும் விடுவிக்கலாம்

ஜனாதிபதி நினைத்தால் எவரையும் விடுதலை செய்யலாம். விசேட கோரிக்கைகள் அவசியமில்லை. சிறையில் அடைக்கப்பட்டுள்ள எவரையும் விடுதலை செய்யும் அதிகாரம் அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.சி.வெலியமுன தெரிவித்துள்ளார்.

எவரேனும் கோரிக்கை விடுத்தால் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வது குறித்து ஆராய முடியும் என ஜனாதிபதி தெரிவித்திருந்தமை குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதிகள் முறைகேடாக பயன்படுத்திய அரசியல் அமைப்பின் அதிகாரம் பொது மன்னிப்பு என்ற விடயமாகும். கோனவல சுனில் முதல் அண்மையில் கண்டி மாநகர முதல்வர் வரை நபர்களுக்கு ஜனாதிபதிகளினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தேவை இருப்பின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு பொதுமன்னிப்பு வழங்க முடியும் எனவும் வெலியமுன மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# 2011.12 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 800- சார்லமேன் புனித ரோமப் பேரரசனாக முடிசூடினான்.

★ 1000-ஹங்கேரிப் பேரரசு முதலாம் ஸ்டீபனின் கீழ் கிறிஸ்தவ நாடாக உருவாக்கப்பட்டது.

★ 1066-முதலாம் வில்லியம் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.

★ 1643-கிறிஸ்மஸ் தீவு கண்டுபிடிக்கப்பட்டது. பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் ரோயல் மேரிகப்பலின் தலைவன் வில்லியம் மைநோர்ஸ் என்பவரால் இத்தீவுக்கு கிறிஸ்மஸ் தீவு எனப் பெயரிடப்பட்டது.

★ 1741-ஆண்டர்ஸ் செல்சியஸ் தனது செல்சியஸ் வெப்பமானியைக் கண்டுபிடித்தார்.

★ 1758-ஹேலியின் வால்வெள்ளி ஜொகான் பாலிட்ச் என்னும் ஜேர்மனியரால் அவதானிக்கப்பட்டது.

★ 1868-அமெரிக்க உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட அனைத்து கூட்டமைப்புப் படைவீரர்களுக்கும் பொது மன்னிப்பை அமெரிக்க ஜனாதிபதி அண்ட்ரூ ஜோன்சன் அறிவித்தார்.

★ 1914-முதலாம் உலகப் போர்: ஜேர்மனிக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு போர்நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.

★ 1926-ஜப்பானின் டாயீஷோ மன்னன் இறக்க அவனின் மகன் ஹிரோ ஹிட்டோ அரசனானான்.

★ 1932-சீனாவின் கான்சு நகரில் 7.6 நிலநடுக்கம் ஏற்பட்டதில் 70 ஆயிரம் பேர் இறந்தனர்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஹொங் கொங் மீதான ஜப்பானின் முற்றுகை ஆரம்பமாயிற்று.

★ 1947-சீனக் குடியரசின் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.

★ 1968-சம்பளம் அதிகரிக்கக் கோரி போராட்டத்தில் ஈடுபட்ட 42 தலித் மக்கள் தமிழ்நாட்டில் உயிருடன் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1977-இஸ்ரேல் பிரதமர் பெகின் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்தை சந்தித்தார்.

★ 1979-சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானில் தனது படைகளை பெருமளவில் இறக்கியது.

★ 1989-ருமேனியாவின் முன்னாள் கம்யூனிசத் தலைவர் நிக்கொலாய் செய்செஸ்குவுக்கும் அவரது மனைவிக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1990-உலகளாவிய வலைத் திட்டம் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

★ 1991-சோவியத் ஜனாதிபதி பதவியில் இருந்து மிக்கைல் கொர்பச்சோவ் விலகினார். அடுத்த நாள் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.

★ 1991-உக்ரேய்ன் சோவியத் ஒன்றியத்தில் இருந்து விலகியது.

★ 2003-மார்ஸ் எக்ஸ்பிரஸ் விண்கலத்தில் இருந்து டிசெம்பர் 19 இல் ஏவப்பட்ட பீகில் 2 விண்கலம் தரையில் இறங்குவதற்கு சற்று முன்னர் காணாமல் போனது.

★ 2004-காசினி விண்கப்பலில் இருந்து சனிக் கோளின் சந்திரனான டைட்டானில் இறக்குவதற்காக ஹியுஜென்ஸ் என்ற சேய்க்கலம் விடுவிக்கப்பட்டது. இது 14.01. 2005 இல் டைட்டானில் இறங்கியது.

### பிறப்புக்கள்

★ 1876-முகமது அலி ஜின்னா, பாகிஸ்தானைத் தோற்றுவித்தவர் (இ.1948)

★ 1899-ஹம்பிறி போகார்ட், அமெரிக்க நடிகர் (இ.1957)

★ 1906-ஏர்ணஸ்ட் ருஸ்கா, ஜேர்மனிய இயற்பியலாளர், நோபல் விருதாளர் (இ.1988)

★ 1918-அன்வர் சதாத், எகிப்திய தலைவர், நோபல் விருதாளர் (இ.1981)

★ 1919-நௌஷாத் அலி, இந்திய இசைக் கலைஞர் (இ.2006)

★ 1924-அடல் பிஹாரி வாஜ்பாய், முன்னாள் இந்தியப் பிரதமர்

★ 1927-ராம் நாராயண், இந்துஸ்தானி இசைக்கலைஞர்

★ 1949-நவாஸ் ஷெரீப், பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்

### இறப்புக்கள்

★ 1796-வேலு நாச்சியார், ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண் (பி.1730)

★ 1931-பா.வே.மாணிக்க நாயக்கர், அறிவியல் தமிழ் வளர்த்த தமிழிஞர் (பி.1871)

★ 1977-சார்லி சாப்ளின், ஹோலிவுட் நடிகர் (பி.1889)

★ 1994-ஜெயில் சிங், முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் (பி.1916)

★ 2006-தமிழோவியன், இலங்கையின் மலையகத்தின் மூத்த இலக்கியவாதியும் கவிஞரும்

★ 2006-ஜேம்ஸ் ப்ரௌன், இசையறிஞர் . (பி.1933)

### சிறப்பு நாட்கள்


★ கிறிஸ்துமஸ்- கிறிஸ்து இயேசுவின் பிறப்பை குறிக்கும் முக்கிய பண்டிகை

★ பாகிஸ்தான்- தேசிய விடுமுறை (முகமது அலி ஜின்னா பிறந்த நாளை முன்னிட்டு)



★ 1642-பௌதீகவியலாளரும் கணிதவியலாளருமான ஐசாக் நியூட்டனின் பிறந்த தினம்.

# கருணைக்கு பேதமில்லை



ஆன்மீகம் 02

எச்.ஐ.வி. கிருமிகள் உடலில் இருக்கும்போது, நோய் எதிர்ப்பு சக்தி மிகவும் குறைந்துவிடுகிறது. ஆனால், நம்முடைய உயிர்ச் சக்தியை தீவிரமான நிலையில் வைத்திருந்தால், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்திக்கொள்ள முடியும். எல்லா சக்தியையும் பெறமுடியாமல் போனாலும், நிச்சயமாக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்திக் கொள்ள முடியும்.

நாம் உண்ணும் உணவு, நம் சுவாசம், வாழும்முறை, நமது செயல்கள் ஆகியவற்றை உயர்ந்த நிலையில் வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தினால் நோய் எதிர்ப்பு சக்தியை நிச்சயமாக அதிகரித்துக் கொள்ள முடியும். எச்.ஐ.வி அல்லது எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இந்த வாய்ப்பை உருவாக்கும் நோக்கத்துடன் தற்போது ஈஷா யோக மையம் தமது பணிகளை விரிவாக்கியுள்ளது.

நோயால் பாதிக்கப்பட்டவர்களை சமூகம் எதிர்க்கத் தேவையில்லை. நோயால் பாதிக்கப்பட்ட மனிதனுக்கு மற்றவர்களின் அன்பும், ஆதரவும்தான் தேவை, எதிர்ப்புத் தேவையில்லை. ஒரு மனிதனுக்கு காலில் முள் குத்தினால்கூட அந்த நேரத்தில் சுற்றியிருப்பவர்களின் கருணை தேவைப்படுகிறது. காலில், பெரிய நோய் ஒன்றும் வராவிட்டாலும்கூட சாதாரணமாக முள் குத்துவதே அந்த நேரத்தில் பெரியவிடயமாகத்தான் இருக்கிறது. ஒரு பாதிப்பு பெரியது, மற்றொன்று சிறியது என்றெல்லாம் இல்லை. கேன்சர் வந்தால் அன்பு செலுத்த வேண்டும், எச்.ஐ.வி. வந்தால் அன்பு செலுத்தக்கூடாது என்பதெல்லாம் தேவையில்லை. ஒரு மனிதன் பாதிப்பில் இருக்கும் போது, அவனுக்காக துடிப்பதென்பது, இயற்கையாகவே ஒவ்வொரு மனிதரின் இதயத்திலும் நிகழ்வது. ஆனால் நமக்குள் இருக்கும் இந்த மனிதத்தன்மை என்னும் துடிப்பை ஏன் செயற்படவிடாமல் இருக்கிறோம்?

நாம் பலவாறாக முன்கூட்டியே முடிவெடுத்திருக்கிறோம். இது சரியல்ல அது சரியல்ல என்று முடிவெடுத்திருக்கிறோம். மற்றொரு மனிதனுக்கு பாதிப்பு வந்தால் அவருக்கு என்ன செய்ய வேண்டும் என்று பார்க்கும் தன்மை, ஒவ்வொரு மனிதருக்கும் இருக்கிறது. இப்படியிருக்க யாரும் உங்களுக்கு சொல்லித்தரத் தேவையில்லை. நமக்குள் மனிதத்தன்மை என்பது இருந்தால் மற்றொரு மனிதனின் பாதிப்பிற்கு நம்மால் முடிந்ததை செய்ய வேண்டும். என்ற உணர்வு இயல்பாகவே வெளிப்படும். இதற்கு யாருடைய போதனையும் தேவையில்லை. ஆனால், இந்த அடிப்படையான மனிதத்தன்மையையே அழித்ததோடு, தவறான முன்முடிவுடன், எதிர்மறையாக செயற்படக் கூடிய சூழல் சமூகத்தில் நடந்து கொண்டேயிக்கிறது.

எயிட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தவில்லையென்றால், இந்நோயை பரவவிடக்கூடாது என்ற பொறுப்பை நம் கைகளில் எடுக்க வில்லையென்றால், ஒவ்வொரு மனிதனுக்கும் இதனால் பாதிப்பு வருவதற்கான வாய்ப்பிருக்கிறது. அபிரிக்காக் கண்டத்தில் இப்போது நோய் சிறிது குறைய ஆரம்பித்திருக்கிறது சில தேசங்களில் ஒரு சில நேரங்களில், 80% மக்களுக்கு எச்.ஐ.வி. நோய் இருந்திருக்கிறது. அப்போது மற்ற நாடுகளில் இருந்து சென்று தேவையான உதவியினை அங்கே செய்யவில்லையென்றால், அங்கிருந்த மக்கள்தொகை முழுதும் அழிந்துவிடும் அபாயம் இருந்தது. இந்தியாவில் 10,15 வருடங்களாக அதற்கான செயல்களைச் செய்தும், எயிட்ஸ் நோய் பற்றிய அறிவு தொடக்க நிலையிலேயே இருப்பதாகத்தான் தெரிகிறது. நோயின் பாதிப்பில் இருப்பவர்கள் சிறிது கவனமாக, இது நம்மால் மற்றொரு வருக்கு பரவக்கூடாது என்ற பொறுப்புடன் இருக்க வேண்டும். நம்முயிர் இதைத் தாண்டிப் போவதற்கு தேவையான பயிற்சிகளை வாழ்வில் கொண்டுவர வேண்டும். பயிற்சிகளை மேற் கொள்வதால் முழுமையாக அகன்றுவிடும் என்பதல்ல. ஆனால், சில எளிமையான பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் நிச்சயமாக நோயின் பாதிப்பைத் தணித்து வாழவாய்ப்பிருக்கிறது. சாப்பாடு, பயிற்சி, வாழும்முறை ஆகியவற்றில் சிறிதளவு ஒழுக்கத்தினைக் கடைப் பிடித்தாலே, நிச்சயமாக நாம் இந்த சூழ்நிலையைத் தாண்டி, முழுமையான வாழ்க்கை வாழவாய்ப்பிருக்கிறது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# மலேசியாவில் பயண இலக்கியம் ஒரு கண்ணோட்டம்

05

பயணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களும் சேர்க்கப்பட்டிருப்பது இந்நூலில் இடம்பெற்ற செய்திகளுக்கு வலுச் சேர்க்கின்றன. அத்தோடு பயணத்தில் இடம்பெற்ற எழுத்தாளர்கள் எண்ணக் குவியலையும் பின் இணைப்பாக இந்நூலில் நூலாசிரியர் பெ.இராஜேந்திரன் கொடுத்துள்ளார்.

ஓர் இலக்கிய ஆய்வுப்பயணம் என்பதோடு நின்று விடாமல், மலேசியத் தமிழ் இலக்கியத்தோடு மலேசியத் தமிழர்களின் வாழ்வியல் செய்திகளையும் அங்குள்ள இலக்கியவாதிகளிடத்தில் மட்டுமல்லாது கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களிடத்திலும் விதைத்துவிட்டு வந்தது ஒரு சாதனையே! மேலும் இரு நாட்டு இலக்கியத் தொடர்புகளையும் வளர்ச்சியையும் தொடரும் வண்ணம் தொடர் திட்டங்கள் நடைபெற்று வருவதற்கு இந்தப் பயணம் வழிகோலியது என்றால் அது மிகையாகாது!

மேற்சொன்ன அத்தனை விபரங்களையும் அழகாகத் தொகுத்து வழங்கியுள்ளார் நூலாசிரியர் பெ.இராஜேந்திரன். மலேசியத் தமிழ் இலக்கியத்தில் இந்தப்பயண இலக்கிய நூல் ஒரு வரலாற்று ஆவணமாகவே பின்னாளில் கருதப்படும் என்பதில் ஐயமில்லை.

மண்ணே, உயிரே (அக்கினியின் ஈழப்பயண அனுபவங்கள்)

மலேசியாவின் சிறந்த பத்திரிகையாளரும் கவிஞருமான அக்கினி சுகுமாரின் மண்ணே உயிரே... எனும் பயணக் கட்டுரை நூல் 2009 இல் வெளிவந்தது.

2002 ஏப்ரல் 10 இல் தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரன் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சியில் செய்தி சேகரிக்க அக்கினியும் புகைப்படக்காரர் பி. மலையாண்டி மலேசிய நண்பன் நாளிதழ் சார்பில் சென்று வந்தனர்.

அந்த அனுபவங்கள் தனக்கே உரிய எழுத்து நடையில் 2002 இல் மக்கள் ஓசை வார இதழில் தொடராக எழுதிய போதே அதற்குப் பெரும் வரவேற்புக் கிட்டியது.

இந்நூல் 245 பக்கங்களில் பல

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

அரிய தகவல்களையும், புகைப்படங்களையும் தாங்கி மலர்ந்துள்ளது. இலங்கையில் அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் சாமாதான ஒப்பந்தம் ஏற்பட்டபோது வந்த தொடர் 2009 இல் புலிகள் தோற்கடிக்கப்பட்டு தமிழினம் சொல்லொணாத் துயரம் அடைந்த போது நூல்வடிவில் வந்தது, சோகத்தை மேலும் இரட்டிப் பாக்குகின்றது.

இலக்கியப் பயணத்தில்
ஹைக்கூ பாடகன்

கவிஞர் ந.பச்சைபாலன் மலேசியாவின் முன்னணி ஹைக்கூ கவிஞர். இவர் 2004ல் மலேசியத் தமிழ் எழுத்தாளர். சங்கத்தின் பயணக் குழுவில் இடம் பெற்றுத் தமிழக இலக்கியச் சுற்றுலாவில் பங்கு கொண்டவர். ஒரு புதிய முயற்சியாக இலக்கியப் பயணத்தில் தனது அனுபவங்களையும் அதன் ஊடாக ஹைக்கூகளையும் அழகுறத் தொடர்புபடுத்தி மிகவும் இரசிக்கத் தக்க முறையில் எழுதியுள்ள நூல் இலக்கியப் பயணத்தில் ஹைக்கூ பாடகன் 203 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

நயனம் வார இதழில் 28 வாரங்கள் இதனைத் தொடராக எழுதினார் பச்சைப் பாலன். அனைவரையும் கவரும் வண்ண நடையில் எழுதப்பட்டுள்ள இந் நூலில் 2004 இல் தமிழகத்தை தாக்கிய சுனாமி பேரலை பற்றியும் அதன் விளைவுகளையும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

மலேசிய இலக்கிய வரலாற்றில் எழுதும் போது நிச்சயம் இந்தப் பயணக் குறிப்புக்கள் இடம்பெறும் என்பது திண்ணம்.

முடிவுரை

தமிழகத்தில் பயண இலக்கியத் துறை வளர்ந்த அளவிற்கு மலேசியாவில் வளர்ச்சி காணவில்லை. ஆனந்தவிகடனில் மணியன் எழுதிய இதயம் பேசுகிறது எனும் தலைப்பிலான பல நாட்டுப்பயணக் கதைகள் மிகவும் பிரசித்தி பெற்றவை.

மலேசியாவில் பல எழுத்தாளர்கள் பயணக்கட்டுரைகளை நாளிதழில் எழுதியுள்ளனர். ஆனால், அவை நூல் வடிவம் பெறவில்லை. ஏனெனில் நூல் வெளியீட்டு விழா விற்பனை போன்றவற்றில் ஈடுபட்டு சிக்கலில் சிக்கிக் கொள்ளப் பலர் விரும்புவதில்லை.

கடந்த 50 ஆண்டுகளில் குறைந்த அளவிலேயே பயணநூல் வெளிவந்ததைப் பார்க்கும் போது, அது இன்னமும் தவழும் குழந்தை நிலையிலேயே உள்ளது.

ஆ.குணநாதன் -மலேசியா

இத்துறையை வளர்த்து வாசகர்களுக்கு அரிய பல தகவல்களை தருவதற்குப் பயணங்கள் மேற்கொள்பவர்கள் தங்கள் எழுத்துக்களை நூல்வடிவில் கொண்டு வருவது இதற்கு ஒரு தீர்வாகும்!

(முற்றும்)

## மாதாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நகரசபையின் 2011 ஆம் ஆண்டுக்கான ஒத்திவைக்கப்பட்ட பதினோராவது மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 10 மணிக்கும்,

2011 ஆம் ஆண்டுக்கான பன்னிரண்டாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10 மணிக்கும் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.


மேற்படி கூட்டத்திற்கு மாநகரசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு யாழ். மாநகர சபையின் செயலாளர் திருமதி ரு. சத்தியானந்தன் கேட்டுள்ளார். (அ)

# பனை-தென்னைவள கூட்டுறவுச்சங்கத்தின் கிராமியவங்கி வவுனியாவில் திறந்துவைப்பு

பனை, தென்னை வன அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி வவுனியாவில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

பல பயனாளிகளுடன் இயங்கிவரும் வவுனியா பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கமானது பயனாளிகளின் பணவைப்பை வேறு வங்கிகளிலேயே இதுவரைகாலமும் மேற்கொண்டு வந்தது.

பாரம்பரிய கைத்தொழில்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வங்கியை திறந்து வைத்தார். அத்துடன் கூட்டுறவாளர்களின் பிள்ளைகள் மற்றும் வெளியாரின் கணனிக் கல்விக்காக பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத்தில் கணனி பயிற்சி நிலையத்தையும் தையல் பயிற்சி நிலையத்தையும் அவர் திறந்து வைத்தார்.



இதேவேளை வவுனியா பொது வைத்தியசாலையில் கடந்த ஒன்றரை வருட காலமாக கடமையாற்றி வந்த தற்காலிக சுகாதார ஊழியர்களை வவுனியா சுவர்க்கா ஹோட்டலில் சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவர்களின் குறைநிறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

ஒன்றரை வருடங்களாக இவ்வைத்திய சாலையில் பணியாற்றிய தம்மை வேலையிலிருந்து நீக்கி புதிய ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாங்கள் தொடர்ந்தும் இவ்வைத்திய சாலையிலேயே கடமையாற்ற ஒழுங்கு செய்து தருமாறு சுகாதார ஊழியர்கள் கேட்டுக் கொண்டனர். இவர்களது கோரிக்கைக்கு பதிலளித்த அமைச்சர், இப்பிரச்சினையை சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வருவதாக தெரிவித்தார். (அ-2)

# சர்வதேச அமைப்புக்கள் மக்களை பிழையாக வழி நடத்துகின்றன

### பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

சில சர்வதேச அமைப்புக்கள் இலங்கை மக்களை பிழையாக வழி நடத்த முயற்சி செய்து வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மையில் தொம்பே பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களை ஆத்திரம் அடையச் செய்யும் வகையில் சில சர்வதேச நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் என்ன தான் முயற்சி செய்தாலும் அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை சிதைக்க முடியாது.

மூன்று தசாப்தகாலமாக நீடித்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த ஜனாதிபதி மற்றும் படை வீரர்களுக்கு எதிராக தொடர்ந்தும் சில சக்திகள் அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றன.

இவ்வாறான அழுத்தங்களை முறியடிப்பதற்கு நாட்டு மக்கள் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சரத்பொன்சேகாவை பார்வையிட வெலிக்கடைக்குச் சென்ற ரணில்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் மாலை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு சென்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை பார்வையிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க மற்றும் ஜயலத் ஜயவர்த்தன ஆகியோரும் ரணிலுடன் சென்றிருந்தனர்.

இதேவேளை ரணில் சிறைச்சாலைக்கு சென்றமை தொடர்பான செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட செய்தியாளர்களுக்கு சிறைச்சாலை அதிகாரிகள் தடை ஏற்படுத்தியதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# பிரகீத் வழக்கில் முன்னாள் சட்டமா அதிபர் குறித்து விவாதம்

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் பிரகீத் எக் னெலிகொட காணாமல்போன சம்பவம் குறித்து வழக்கு விசாரணைகளில் முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

இவர் காணாமல்போன சம்பவம் குறித்த ஹெபாயஸ் கொர்ப்ஸ் வழக்கு விசாரணைகள் ஹோமாகம நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸை ஓர் சாட்சியாக அழைத்து விசாரணை செய்ய உத்தேசித்துள்ளதாக பிரகீத் எக்னெலிகொடவின் குடும்பஸ்தர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

எக்னெலிகொட தொடர்பில் மொஹான் பீரிஸ் கருத்து வெளியிட்டுள்ளதாக சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் கூட்டத்தொடர் ஒன்றில் இவர் குறித்து மொஹான் பீரிஸ் கருத்து வெளியிட்டுள்ளார்.

எனவே காணாமல்போதல் சம்பவம் குறித்து இவரிடம் சாட்சியங்களை திரட்ட திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமர்வில் மொஹான் பீரிஸ் ஆற்றிய உரை தொடர்பான இறுவெட்டு ஒன்றும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் மேற்படி நபரை சாட்சியாக அழைக்கக்கூடாது என எதிர்த்தரப்பு சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதேவேளை எக்னெலிகொட ஐரோப்பிய நாடொன்றுக்கு தப்பிச் சென்றுள்ளதாக முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் ஐக்கிய நாடுகள் கூட்டத் தொடர் ஒன்றில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மாலபே தனியார் கல்லூரியிடம் கட்டணத்தை கோரும் பெற்றோர்

சர்ச்சைக்குரிய மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியின் மாணவர்களின் பெற்றோர், தாம் கட்டணமாக செலுத்திய பணத்தை இந்த மருத்துவக் கல்லூரி திருப்பித் தர வேண்டும் என்று கேட்டு சட்டத்தரணியூடாக கடிதம் அனுப்பியுள்ளதாக கூறியுள்ளனர்.

இக்கல்லூரி அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ கல்வி நிறுவனம் அல்ல எனவும் தாம் கட்டிய பணத்தை திருப்பித் தர வேண்டும் எனவும் தமக்கு உண்டான மன அழுத்தங்களுக்கு நட்டஈடு செலுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

வர்த்தமானி அறிவித்தலின் படி 2011 செப்டெம்பர் மாதத்தில் அல்லது அதற்குப் பின்னர் சேர்ந்த மாணவர்கள் மட்டுமே இறுதிப் பரீட்சையின் பின் மருத்துவ வாண்மையாளர்களாக அங்கீகரிக்கப்படுவர்.

நாம் ஏமாந்து விட்டோம் என்பது இப் போதுதான் விளங்குகின்றது. தாம் சட்ட பூர்வமான நிறுவனம் என அவர்கள் கூறினர். ஆனால் அது உண்மையில்லை எனவும் குறிப்பிட்டனர். (அ-2)


**ST.JOHN'S COLLEGE, JAFFNA**

- **London A/L 2012 Batch**
  **(Week-end & Evening classes)**
- **Sri Lankan A/L English Medium 2014 Batch**

Applications are invited for the above courses.
Apply on or before 06.01.2012

Admission Test 07.01.2012, 9.00a.m.
Commencement 09.01.2012

Application Forms could be obtained at the college from 9.00a.m. to 4.00 p.m.

**Principal**
**St.John's College, Jaffna.** (C-5304)

**ST.JOHN'S COLLEGE, JAFFNA**

**VACANCIES FOR TEACHERS**

Applications are invited from suitable applicants for the following

1. Computer Science (English Medium O/L & A/L)
2. Business Studies (English Medium A/L)
3. Accounts (English Medium A/L)
4. To teach English Medium Subjects for Kindergarten & Primary Levels

The last date for receiving applications is 3rd January 2012. Sports & IT skills will be an advantage. Apply with full bio-data and photocopies of certificates Degree/ Diploma. The applications will be short listed and called for an interview.

(C-5304) **Principal**
**St.John's College, Jaffna.**

# வடக்கில் சீரற்ற காலநிலையால் மக்களின் அவலம் தொடர்கிறது

(கொழும்பு)

வடக்கில் நிலவி வரும் சீரற்ற காலநிலையினால் மக்கள் பெரும் இடர்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மழை வெள்ளம் காரணமாக சுமார் 38 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கரித்தாஸ், டொன் பொஸ்கோ போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மழை வெள்ளம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 14 ஆயிரத்து 500 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த மற்றும் உலர் உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மன்னார் மாவட்டத்தின் குறிப்பாக தலைமன்னார் கிராமம் மற்றும் தலைமன்னார் பியர் ஆகிய பகுதிகளில் பாரிய வெள்ளம் ஏற்பட்டுள்ளது. கிராமங்களில் உள்ள பல வீடுகளினுள் மழை வெள்ளம் தேங்கியுள்ளது. இதனால் இந்தக் கிராமமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இதனை அடுத்து நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்யெர்ந்து உறவினர்கள் மற்றும் நண்பர்களுடைய வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுடைய வீடுகளில் இருந்த முக்கிய ஆவணங்கள், மின்சாதனப் பொருட்கள் என்பன வெள்ளநீரில் சிக்கியுள்ளதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட தலை மன்னார் கிராமம், தலைமன்னார் பியர் பகுதி மக்களை தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று முன்தினம் மதியம் நேரில் சென்று பார்வையிட்டார். இதன்போது பாதிக்கப்பட்ட மக்கள் தமது பிரச்சினைகள் மற்றும் பாதிப்புக்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர். (அ-2)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் பாலவரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன் போது அறிக்கை சமர்ப்பித்தல், கடந்த ஆண்டு செயற்பாடுகள், கணக்கறிக்கை சமர்ப்பித்தல் ,புதிய நிர்வாகச் குழுத் தரிவு என்பன இடம்பெறவுள்ளது என கழகம் அறிவித்துள்ளது. (அ)

# கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் கடற்படையினருடனான சந்திப்பு

வடமராட்சி கிழக்கின் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திற்கு உட்பட்ட மாமுனை தொடக்கம் சுண்டிக்குளம்வரையான கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இலங்கை கடற்படையினருக்குமான சந்திப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் காங்கேசன்துறை கடற்படை அதிகாரியான கப்டன் கமகே மற்றும் சுண்டிக்குளம் கடற்படை அதிகாரி மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதில் வடமராட்சி கிழக்கில் கடற்தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இறுதி யுத்தத்தின் போது இப்பகுதி கடற்தொழிலாளர்களால் கைவிட்டு செல்லப்பட்டு இன்னும் மீட்கப்படாத படகு இயந்திரம் மற்றும் வலைத்தொகுதி என்பன கண்டெடுப்பது சம்பந்தமாக ஆராயப்பட்டது.

அத்துடன் இறுதியுத்தத்தின் போது வன்னிப்பகுதியில் இருந்து கடல் மார்க்கமாக வந்து பருத்தித்துறை கடற்படையினரிடம் தஞ்சமடைந்த பொதுமக்களது இன்னும் வழங்கப்படாதுள்ள படகு இயந்திரம் பெறுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதனை விட வடமராட்சி கிழக்கில் கடற்தொழில் செய்வோர் கடல்மூலமாக போதை வஸ்துகள் கடத்தப்படுவது சம்பந்தமாக விழிப்புணர்வுடன் இருக்குமாறு கடற்படையினரால் தெரிவிக்கப்பட்டது. (அ-3-64)

# அரச ஊழியர்களை குறைக்க உலக வங்கி வலியுறுத்துகிறது

## பிரதமர் தெரிவிப்பு



அரச ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்கும் படி உலக வங்கி வேண்டுகோள் விடுத்தபோதும் அதனை செய்வதற்கு அரசு தயார் இல்லை என்றும் பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று கண்டி, மலையக கலை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற கண்டி மாவட்ட ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், இலங்கை அரச ஊழியர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுப்போம்.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டாகும் போது இலங்கையில் ஒருவரது வருடாந்த வருமானம் நான்கு இலட்சம் ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நாம் எமது உழைக்கும் படையில் 18 இலட்சம் பேரை நாம் இழக்கத் தயாரில்லை.

அதேநேரம் ஒருவர் ஓய்வூதிய வயதை அடைந்து விட்டார் என்பதற்காக அவரது ஆற்றல் அனைத்தும் குறைந்து விடுவதில்லை. எமது நாட்டில் அபிவிருத்திக்கு அவர்களது பங்களிப்பையும் பயன்படுத்த முடியும் என்றும் கூறினார். (அ-2)

யில் 12 இலட்சம் அரச ஊழியர்களும் ஆறு இலட்சம் ஓய்வூதியம் பெறுபவர்களும் அரச கொடுப்பனவு பட்டியலில் உள்ளனர்.

இது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு பாரிய சுமை என்றும் அதனை எட்டில் ஒன்றாக குறைக்க வேண்டும் என்றும் உலக வங்கி உட்பட பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றன.

இருப்பினும் ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையில் அரச ஊழியர்களுக்கு கூடிய அந்தஸ்து வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது. அதற்கு அமைய ஒருபோதும் ஆட்குறைப்பு செய்ய நாம் தயார் இல்லை. மாறாக

# நூல்வெளியீட்டு விழா

அருள்மிகு தெல்லிநகர் துர்க்கையின் அதி அற்புதங்களிலான பற்பல வடிவங்கள் கொண்ட' தெய்வங்கள் மீது இயற்றி பாடப்பெற்ற 150 இற்கும் மேற்பட்ட பாடல்களின் தொகுப்பான புலமையும் வறுமையும் நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் மருதனார்மட அருள்வளர் ஸ்ரீ சுந்தரேஸ்வர ஆஞ்சநேயர் ஆலயத்தில் சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலுக்கான ஆசியுரையினை பிரம்மஸ்ரீ க.மு.சோமசுந்தரக்குருக்களும் நூல் ஆய்வுரையினை விகடகுரு சிவஸ்ரீ குமார சரவணபவக்குருக்களும் வாழ்த்துரையினை சிவ சண்முகவடிவேல் ஆகியோரும் ஆற்றவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை பிரம்மஸ்ரீ குமார சுவாமிநாத சர்மாவும் கௌரவ பிரதிகளை முத்துக்குமார குருக்கள் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (அ)

# ஆணைக்குழு அறிக்கை குறித்து விளக்கமளிக்கத் திட்டம்

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து இராஜதந்திர ரீதியில் விளக்கமளிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவின் உள்ளடக்கம் மற்றும் அதன் பரிந்துரைகள் இவ்வாறு விளக்கப்படவுள்ளன.

வெளிநாடுகளுக்கான இலங்கைத் தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களின் ஊடாக விளக்கமளிக்கப்பட உள்ளது.

இலங்கை தொடர்பில் சில நாடுகள் கொண்டிருக்கும் பிழையான கருத்துக்களை நீக்கவும் போலிப் பிரசாரங்களை தகர்த்து எறியவும் இந்த நடவடிக்கை அவசியமானது என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு முன்னோடியாக இலங்கையில் பணியாற்றி வரும் வெளிநாட்டுத்தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே இராஜதந்திரிகளுக்கு இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் விளக்கமளித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை பொதுநலவாய நாடுகள் அமைப்பு, சீனா, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகள் வரவேற்றுள்ளன என வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் சரத் தசநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)


# அதிவேக நெடுஞ்சாலை பஸ் சேவையை ரயில் சேவையுடன் இணைக்கத் திட்டம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள சொகுசு பேருந்து சேவையை களனிவெளி பாதையில் (கொழும்பு-அவிசாவளை புகையிரத பாதை) இயங்கும் புகையிரத சேவையுடன் இணைப் பதற்கான சாத்தியம் குறித்து அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

கொட்டாவையில் இருந்து புகையிரதம் புறப்படும் நேரங்களுக்கு ஏற்ப மேற்படி பேருந்து சேவையில் நேர அட்டவணையை தயாரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெற்கு அதிவேக நெடுஞ் சாலை நடவடிக்கைகள் பணிப்பாளர் பி.டி.பண் டார தெரிவித்தார்.

கொட்டாவையிலிருந்து ரயில் மூலம் கொழும்பு நோக்கி பயணித்தால் காலி- கொழும்பு பயணத்திற்கு இரு மணித்தியாலங்களுக்கு மேல் செல்லாது என அவர்கூறினார். (அ-2)







வடமாகாண பண்பாட்டுத் திணைக்களமும் திருமறைக் கலாமன்றமும் இணைந்து நடத்திய ஒளிவிழா நிகழ்வு அண்மையில் திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி சிறுமி ஒருவருக்கு நத்தார் பரிசு வழங்குவதனையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களிற் காணலாம். (படங்கள்:-என்.[illegible])

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### சூழ்ந்து கொண்ட சுனாமி

வந்து வாசல் நின்றவள்
நொந்து உயிர் கொன்றவள்
விட்டுவைத்த உயிர்களை
தட்டுத்தடுமாற வைத்தவள்
பங்கமென பொங்கினவள்
அங்கமதைப் பரிசாக்கினாள்
அலையெடுத்து உயர்ந்தவள்
தலைமைக்கு யார் என்றவள்
இத்தனையும் செய்தவள்
ஏழுவருடங்கள் காலியாகியும்
கண்ணீர் இன்னும் வற்றவில்லையே
கவலைகள்தான் குறையவில்லையே
எட்டாத் தூரத்தில் நீயெழுந்தாய்
எட்டி எமையும் பிடித்துக்கொண்டாய்
சூழ்ந்து கொண்டு சுபீட்சம் எடுத்தாய்
சும்மா நீயிரு
சுமையேதும் இனித்தந்து கொள்ளாதே
சுற்றும் பூமிதன்னில் மனிதனை வாழவிடு
சூத்திரமாய் நிகழ்ந்த கடல் இனியும்
சுற்றியெழுந்து சூழ்ந்திடலாமோ?

தமிழ்
யாழ்.பல்கலைக்கழகம்

### நீ எனக்கு வேண்டும்

ஆர்ப்பரிக்கும் நேரங்களிலும்
அலைமோதும் குழப்பங்களிலும்
நீ வேண்டும்- எனக்கு
நீ மட்டும் தான் வேண்டும்
என் கறுப்பு வெள்ளை
இரவுகளில் வந்து செல்லும்- என்
வண்ணக் கனவே- எனக்கு
நீ மட்டும் தான் வேண்டும்-உன்
பாதம்படும் பூமியில்- என்
கண்கள் உன்னைத் தேட
அலைகின்றனவே - எனக்கு
நீ மட்டும் தான் வேண்டும் என்று

ச.டுசிந்தன்
மந்துவில்

### ஊமை இராகங்கள்

எழுதப்படாத காவியமாகவும்
ஏறாத ஏணியாகவும்
என் வாழ்க்கைப் பயணங்கள்
போய்கொண்டிருக்கின்றன
எவ்வளவுதான் சிரித்துப் பேசினாலும்
என் மனக் காயங்களும்
ஊமை வலிகளும்
என்னுடனே தொடர்கின்றன
என் சோகங்கள்
என்றுமே மாறாதா?
என் காயங்கள்
என்றுமே ஆறாதா...

கி.தீபனா
புங்குடுதீவு

### அவரவர் பார்வையில்

**காதல்**
தூக்கம் சிதைக்காத
கனவுகள் கொடு
மௌனம் கலையாத
காதல் தருகிறேன்

**அன்பு**
எத்தனை பிறவி எடுத்தாலும்
நான் உன்மேல் கொண்ட
அன்பு என்றும் அழியாமல்...

ச.சஜீனா
வியாபாரிமூலை

**நட்பு**
இவ்வுலகில் எல்லாவற்றுக்கும்
மேலான ஓர் புனிதமான உறவு

**அழகு**
முகத்தின் அழகைவிட- உன்
அகத்தின் அழகே சிறந்தது

**ஆணவம்**
உன்னையும் அழித்து உன்னை
சுற்றி இருப்பவர்களையும் அடியோடு
அழிக்கக்கூடிய சக்திவாய்ந்த சொல்

**காதல்**
புரிந்தவனுக்கு அமுதம்
புரியாதவனுக்கு விசம்- மொத்தத்தில்
விசம் கலந்த அமுதம் என்பதை
என்றுதான் உணரப் போகிறாரோ?

பொ.இளவரசி
பருத்தித்துறை

### நிலவாய்

கலைஞனின் கவியில் நிலவாய்
காதலனின் கண்ணில் நிலவாய்
கணவனின் கையில் நிலவாய்
கணிக்கப்பட்டவள்தான் பெண்
வான் நிலவிற்கு வளர்பிறை வருவதுமுண்டு
பெண் நிலவிற்கு தேய்பிறையே வருகிறது
இன்பம் அனுபவிப்பது பிறரே
துன்பம் அனுபவிப்பது இவளே
திங்களைப்போல் வளர்பிறையேனும்
பெண்களுக்கும் வேண்டும்
நிலவாய் வாழ்ந்திட வேண்டும்

கொற்றையூர் மகே-மேனன்

### வீணாகும் கணம்

நாங்கள்
பேசத் தெரிந்த ஊமைகள்
பகுத்தறிவுள்ள மிருகங்கள்
தொடர்களில் தொலையும் இரவுகள்
தொலைபேசி வழி உறவுகள்
போதைதேடும் சாலைகள்
வம்புச் சண்டை வாழ்க்கைகள்
கர்ப்பத்தில் முறியும் காதல்கள்
விபத்திலே முடியும் வேகங்கள்
வேண்டாம் இந்த சோகங்கள்

ச.தீபன்
மயிலங்காடு

### இமயம் தொட...



அழிவுகளைக் கண்டு
அழுவதை விட
அதற்கான காரணங்களை
கண்டறி
என்னால் முடியும் என்பதை
உன்னுள் விதை
அடம்பன் கொடியாய்
திரண்டு நில்
உண்மைகள் உறங்கிடாது
பொய்கள் வாழ்ந்திடாது

மாவை நா.கஜேந்திரன்

### என் வாழ்விடமே

பட்ட மரங்களும்
பழுத்துவிட்ட கூரைகளும்
வேலிகள் காலியானதால்
வெட்டவெளியான
எங்கள் குடியிருப்பு
துள்ளி விளையாடிய முற்றத்தில்
கள்ளியும் கடுகு நாவலும்
அள்ளிப்பருக அமுதநீர் தந்த கிணறு
அகழியாகிக் குமுறுகிறது
ஓணான்களும் அரணைகளும் கூட
மனித வாடையில்லாத ஏக்கத்தில்...
படுத்தெழுந்த அந்தத் தின்னை
குந்தியிருந்த பலாமரவேர்
ஓடி விளையாடிய முற்றம்
அங்கே!
ஒரேயொரு முறை நாம்
அமரும் நாள் வந்தால்
அதுவே போதும்

நி.ஆதித்தன்
வண்ணார்பண்ணை

## மௌனத்தின் தேடல் – 102



### வெற்றியை உனதாக்காயோ

பட்டம் பெற்றவர்கள் படும் துயரம்
போதாதென்று...
பாலகனே நீயும்
பட்டம் பெறத் துடிக்கின்றாய்
திட்டமின்றி பட்டம் பெற்றவர்
வாழ்க்கை வறண்டது போதுமையா
திட்டமிட்டு நீ கல்வி கற்று
வெற்றியை உனதாக்காயோ

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

### இலட்சியம்

செல்வங்களுள் சிறந்த செல்வம்
கல்விச் செல்வம் போன்று
எதிர்கால சந்ததிக்கு எடுத்துக்காட்டாய்
மகுடம் சூடி அழகு பார்த்திடும்
இக்குழந்தையின் உற்று நோக்கிய பார்வையிலே
இலட்சியத்தின் சாயல் தெரிகின்றது

அ.துசாந்தினி
கொம்மாந்தறை

### விளையும் பயிர்

பல்கலைக்கழகம் சென்று
பட்டங்கள் பெற்று உயர்
பதவிகளில் அமர்ந்து
பெற்றவர் மனம் மகிழப்
பெருமையுற வாழ்வானிவன்
விளையும் பயிரை-அதன்
முளையிலே தெரியுந்தானே

துரை
தென்மட்டுவில்

### எழுந்து நில்

அமர்ந்திருக்கும் கோலத்தில் எழுந்துநில்
எதிர்காலம் சிறப்புற நடந்திடு
சூரியக்கதிர்போல பிரகாசித்திடு
இளம்தளிர் நீளும் பட்டமும் பதவியும்
பெற்று உயர்ந்திடுவாய்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### கனவு

அன்புக் குழந்தையே
நீ பள்ளி செல்லும் முன்னே
பட்டம் பெற கனவு கண்டாயோ
நாளைய உலகம் உனது கையிலடா
உன் கனவு நனவாக
எனது வாழ்த்துக்கள்

அ.அன்ரன்
யாழ்ப்பாணம்

### உயர்ந்திடு

அன்னை அவள் உன்னை
பள்ளி அனுப்பும் முன்னே
பல்கலைக்கழகம் சென்று நீயும்
பட்டம் பெறவும் கண்டாளோ
பாதி உறக்கம் கலைந்து
பாசத்தோடு உனை அணைத்த
அவள் கனவை நீ கலைக்காதே

திருமதி.அ.மேரி அல்போன்சா
குருநகர்

### வாழ்த்துக்கள்

பச்சிளம் பாலகனே
உன் எதிர்காலக்
கனவுகள் எல்லாம்
நனவாக நானும்
உன்னை மனதார
வாழ்த்துகின்றேன்

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

### நியதி

உலகே!
கல்வியின் கனதி-ஆயுள்
காலத்தின் நியதி-அதனால்
கற்றிடு பெற்றிடு இந்த
கடமையை ஏற்றிடு

சி.மதுஸ்ரீகன்,யாழ்ப்பாணம்

### துயர் துடைப்பாய்

பாரினிலே நீ
வளர்ந்து பட்டங்கள் பெற்றிடுவாய்
பரிதவிக்கும் எம்
இனத்தின் பரிதாபத் துயர் துடைப்பாய்
நம்ப இனி யாருமில்லை
நம்புகின்றோம் நாங்கள் உன்னை

திருமதி சந்திரன்தேவி
மானிப்பாய்

### கனவு பலிக்குமா?

இயேசுவின் தலையில்
முள் கிரீடம் போல - உன்
சின்னஞ்சிறு தலையில் தொப்பிபோட்டு
அழகு பார்க்கிறேனடா கண்ணா - ஏன்
சிறந்த கல்விமானாக நீ உயர
உலகம் உனக்கு மகுடம் சூட்ட
காணவேண்டும் என்ற கனவுதான்

வி.கேதனா

### எதற்காக?

எம் தங்கமே நீ!
இதை ஏன் சுமந்து
உன் தரத்தினைக்
குறைத்துவிட்டாய்

அன்னைதாஸன்

### பட்டம்

பட்டம் சுமந்தவர்
பாதையோரம்
பதாதைகளோடு
அன்னையின்
எதிர்பார்ப்போடு
உன் தலையிலும்
சூடினரோ?
அழகான பட்டம்!

கே.ரஞ்சித் விஜயகுமார்
யாழ்ப்பாணம்

### உனக்காக ஓர் பிரார்த்தனை

சிறுவா உன் துணிச்சலை
மெச்சுகின்றேன்!
உனக்காவது வேலை கிடைக்க
வேண்டும் என்று இந்த
வேலையில்லா பட்டதாரி
பிரார்த்திக்கின்றேன்

செ.வினுஷா
பிளவத்தை

### உயர்வு

பள்ளி நானும் போவேன்
பாடங்களைப் படிப்பேன்
படிப்படியாய் உயர்வேன்
பட்டம் பல பெறுவேன்
பாரில் புகழை அடைவேன்
பணிகள் பல செய்வேன்
பண்பாய் நானும் வாழ்வேன்

யோ.அஜய்ன்ஸ்செபான்
குருநகர்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 103

**அன்பு வாசகர்களே !**





உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 30.12.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# காகில்ஸ் புட்சிற்றியில் 500 ரூபாயை செலவு செய்து பரிசுகளைப் பெறும் வாய்ப்பு




இலங்கையின் முன்னணி சுப்பர் மார்க்கெட் தொகுதியான காகில்ஸ் புட்சிற்றி தனது வாடிக்கையாளர்களுக்கு நத்தார் மற்றும் புதுவருட பண்டிகைகள் தனித்துவமானதாக அமையும் வகையில் வியத்தகு விற்பனை ஊக்குவிப்பொன்றை வழங்குகின்றது.

விசேட நத்தார் பரிசு என்ற காகில்ஸ் புட்சிற்றியின் விற்பனை மேம்படுத்தல் ரூ.500ஐ மட்டும் செலவு செய்யும் வாடிக்கையாளர்களுள் 10 அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசுகளை வழங்கி அவர்களை இலட்சாதிபதிகளாக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

இந்த விற்பனை மேம்படுத்தல் டிசம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகியுள்ளதுடன் எதிர்வரும் ஜனவரி 15-ம் திகதி வரை நடைமுறையிலிருக்கும்.

இதனைவிட அதிர்ஷ்டம் நிறைந்த வாடிக்கையாளர்களுக்கு 10,000 உடனடிப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

விற்பனை மேம்படுத்தல் பரிசுகளை வழங்க ரூ.15 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.




## எல்லைக்கடன் மீதான வங்கிக்கடன் வரையறை தளர்வுக்கு ப.மு.ச.வரவேற்பு

மூலதனச் சந்தை நடவடிக்கைகளில் எல்லைக் கடன்களின் மீது நிர்ணயிக்கப்பட்டிருந்த 5 சதவீத வரையறையை தளர்த்துவது குறித்து மத்திய வங்கியின் தீர்மானத்தை இலங்கையின் பங்கு முகவர்கள் சங்கம் வரவேற்றுள்ளது.

மத்திய வங்கியானது அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் பட்டியலிடப்பட்ட பிணைகள் மீது வழங்கப்படும் எல்லைக்கடன்களுக்கான வரையறையான 5வீதம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட வேண்டும் என அறிவித்துள்ளமை மிகுந்த வரவேற்கத்தக்க விடயம் என பங்கு முகவர்கள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## ஒன்வேர்ல்ட் அமைப்பில் இணைகிறது கிங்ஃபிஷர்




சர்வதேச அளவில் செயல்பட்டுவரும் ஒன்வேர்ல்ட் விமானப் போக்குவரத்து அமைப்பில் விஜய் மல்லையாவின் கிங்ஃபிஷர் நிறுவனம் இணைகிறது.

பெரும் நஷ்டத்தில் இயங்கிவரும் சூழ்நிலையில் கிங்ஃபிஷர் இந்த இணைப்பை மேற்கொள்ளவுள்ளது.

இந்திய துணைக் கண்டத்தில் இருந்து ஒன்வேர்ல்ட்டில் இணையும் முதல் நிறுவனம் கிங்ஃபிஷர் தான்.

அடுத்த ஆண்டு பெப்ரவரி 10-ம் திகதி இந்த இணைப்பு நடைபெறுகிறது.

ஆனால் தற்போது நாளொன்றுக்கு பல கோடி ரூபாய் நஷ்டத்தை கிங்ஃபிஷர் சந்தித்து வருகிறது.

கிங்ஃபிஷர் தவிர ஏர்பெர்லின், மலேசியா ஏர்லைன்ஸ் ஆகிய நிறுவனங்களும் ஒன்வேர்ல்ட்டில் இணையவுள்ளன. இப்போது அமெரிக்கன் ஏர்லைன்ஸ், பிரிட்டிஷ் ஏர்வேஸ், ஜப்பான் ஏர்லைன்ஸ், றோயல் ஜோர்டானியா உள்ளிட்ட 7 நிறுவனங்கள் இதில் உள்ளன.

இந்த இணைப்பு குறித்து கருத் துத் தெரிவித்த விஜய் மல்லையா,

இது நிதி ரீதியாகவும் எங்களை வலுப்படுத்தும். செலவுகளை குறைக்கவும் வழி ஏற்படும் என்றார்.

150 நாடுகளில் உள்ள 850 இடங்களுக்கு ஒன்வேர்ல்ட் அமைப்பு விமான சேவையை அளித்து வருகிறது.

## ஏர்இந்தியாவின் மொத்த கடன் ரூ.ஒரு லட்சம் கோடி

AIR INDIA

ஏர்இந்தியா விமான நிறுவனத்தின் கடன் சுமை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு செல்வதாக இந்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்நிறுவனத்தின் கடன் சுமை ரூ. ஒரு லட்சம் கோடியை நெருங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அரசுடனான மேலாண் மற்றும் பணியாளர் கூட்டுறவால் ஏர் இந்தியா நிறுவனத்தின் கடன் சுமை படிப்படியாக சீரடையும் என அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5892.69 | 5982.58 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5134.68 | 5189.86 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,795.23 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** செரண்டிப் ஹோட்டல்ஸ்(X)(19.20), யூனியன் அஷூரன்ஸ்(122.90), ஈகுவிட்டி(47.90), சிலோன் லெதர்(W) (16.90), கொமர்ஷியல் டெவலொப்மன்ட் (112.90).

**வீழ்ச்சியடைந்த பங்குகள்(ரூ):** லங்கா அசோக்(2800.00), ஈக்குவிட்டி ரூ (24.10), அவீவா என்டிபி (242.00), ரேணுகா சிற்றி ஹோட்டல்(301.70), பேருவல வோல்கின்(145.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# மத்திய வங்கியின் புதிய உதவி ஆளுநர்கள் நியமனம்

நாணய சபை 2001 டிசம்பர் 16ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் உயர் அலுவலர் தரம் IV இல் பதவி வகித்த அலுவலர்களான ஏ.கமலசிறி, திருமதி ஆர்.தீரசிங்க, எஸ்.எஸ்.ரத்நாயக்க மற்றும் கே.டீ. ரணசிங்க ஆகியோரை 2012 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து உதவி ஆளுநர்களாக பதவி உயர்த்தியுள்ளது.

இப் பதவி உயர்வுகள் மத்திய வங்கியின் தோற்றம் பெற்றுவரும் சவால்களைக் கட்டுப்படுத்துவதற்கான தொடர்ச்சியான திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஏ.கமலசிறி



மத்திய வங்கியில் 32 ஆண்டுகள் பணியாற்றிவரும் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் செயலாளரான ஏ.கமலசிறி புள்ளிவிபரவியல், வங்கித் தொழில் அபிவிருத்தி, பொருளாதார ஆராய்ச்சி, உள்நாட்டு தொழிற்பாடுகள் மற்றும் செயலக நடவடிக்கைகள் ஆகிய துறைகளில் பரந்த அனுபவத்தைக் கொண்டவர்.


உதவி ஆளுநர் என்ற ரீதியில் செயலகம் மற்றும் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு ஆகிய திணைக்களங்களை மேற்பார்வை செய்வார்.

ஆர்.தீரசிங்க



மத்திய வங்கியில் 29 ஆண்டுகளாக பணியாற்றி வருகின்ற முன்னாள் ஊழியர் சேமநிதிய கண்காணிப்பாளரான திருமதி ஆர்.தீரசிங்க பொருளாதார ஆராய்ச்சி, உள்நாட்டுத் தொழிற்பாடுகள், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் மற்றும் ஊழியர் சேம நிதியம் ஆகிய துறைகளில் பரந்த அனுபவத்தைக் கொண்டவர். உதவி ஆளுநர் என்ற முறையில் திருமதி ஆர்.தீரசிங்க ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தினையும் தொடர்பூட்டல் திணைக்களத்தினையும் மேற்பார்வை செய்வார்.

எஸ்.எஸ்.ரத்நாயக்க



மத்திய வங்கியில் 28 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வரும் முன்னாள் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரான எஸ்.எஸ்.ரத்நாயக்க முன்னாள் ஊழியர் சேம நிதியம், வங்கித் தொழில் அபிவிருத்தி, வங்கி மேற்பார்வை, கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் பொதுப்படுகடன் ஆகிய துறைகளில் மிகுந்த அனுபவத்தைக் கொண்டவர்.

கே.டி.ரணசிங்க



பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும் முதன்மைப் பொருளியலாளருமான இவர் முகவர் தொழிற்பாடுகளுக்கு (பொதுப்படுகடன் மற்றும் செலாவணிக் கட்டுப்பாடு பொறுப்பான உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மத்திய வங்கியில் 25 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வரும் கே.டி.ரணசிங்க வங்கித் தொழில் அபிவிருத்தி, பொருளாதார ஆராய்ச்சி மற்றும் கிராமிய கொடுகடன் என்பவற்றில் பரந்த அனுபவத்தினைக் கொண்டவர். இந்நியமனத்திற்கு முன்னர் அவர் இரண்டாண்டுகளுக்கும் மேலாக பொருளாதார ஆராய்ச்சியின் பணிப்பாளர் மற்றும் முதன்மைப் பொருளியலாளர் ஆகிய பதவிகளை வகித்திருக்கிறார்.

## மொபிடெலுக்கு மீண்டும் லலித் டி சில்வா

இலங்கையின் தேசிய கையடக்கத் தொலைபேசி சேவை வழங்குநரான சிறிலங்கா ரெலிகொம், லலித் டி சில்வாவை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக மீண்டும் நியமித்துள்ளதாக அண்மையில் அறிவித்துள்ளது.

2002ஆம் ஆண்டு சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தால் மொபிடெல் கையகப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அதன் முதலாவது பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமைகளை பொறுப்பேற்றார்.

இவர் சிறிலங்கா ரெலிகொமின் சிரேஷ்ட ஆலோசகராகவும், சிறிலங்கா எயார்லைன்ஸ் நிறுவன பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், சவுதி ரெலிகொம் நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகராகவும் பதவி வகித்தவர்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 112.97 | 114.88 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 176.56 | 180.97 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 146.68 | 150.99 |
| சுவிஸ் பிராங் | 119.86 | 123.96 |
| கனேடிய டொலர் | 109.89 | 113.39 |
| அவுஸ்திரேலிய டொலர் | 113.92 | 117.89 |
| சிங்கப்பூர் டொலர் | . 86.94 | 89.60 |
| ஜப்பான் யென் | 1.43 | 1.48 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.16 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.00 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## தாய்லாந்தில் வெள்ளம்; காப்புறுதி நிறுவனங்கள் திணறல்

தாய்லாந்தில் ஏற்பட்ட கடுமையான வெள்ளம் காரணமாக காப்புறுதி நிறுவனங்களுக்கு பெருமளவில் இழப்பு ஏற்பட்டுள்ளது. இழப்பீடுகளை வழங்க முடியாமல் இந் நிறுவனங்கள் திணறுகின்றன.

ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கம் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியின் சீற்றம் ஆகியவற்றால் ஏற்பட்ட இழப்பைக் காட்டிலும் தாய்லாந்தில் ஏற்பட்ட வெள்ளச் சீற்றத்திற்கு அதிக இழப்பீட்டுத் தொகை அளிக்க வேண்டியிருக்கும் என்று டோக்கியோ மெரைன் ஹோல்டிங் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுனாமி மற்றும் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்களுக்கு 120 கோடி டொலர் இழப்பீட்டுத் தொகை வழங்கியதாக இந்நிறுவனம் தெரிவித்தது. ஆனால் தாய்லாந்தில் ஏற்பட்ட வெள்ளச் சீற்றம் காரணமாக வழங்கவேண்டிய இழப்பீட்டுத் தொகை இதைவிட அதிகமாக இருக்கும் என்று இடெல்வைஸ் டோக்கியோ ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் ஜூன் ஹெமி தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் சுனாமி பேரழிவு ஏற்பட்ட பிறகு, காப்புறுதி நிறுவனங்களுக்கு தேவையான பாதுகாப்பை அரசு அளிப்பதாகக் குறிப்பிட்ட அவர், இது போன்ற வசதி தாய்லாந்தில் இல்லை என்றார். இதனால் அளிக்க வேண்டிய காப்புறுதி தொகை மிக அதிகமாக உள்ளது. இது காப்புறுதி நிறுவனங்களுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.



# நத்தார் சிறப்பு மலர்

# 25.12.2011



# 'அவர் தமக்குரியவர்களிடம் வந்தார்; அவருக்குரியவர்கள் அவரை ஏற்றுக்கொண்டனர்'

விஞ்ஞானத்தின் வியப்புக்கள், காலத்தின் சுழற்சிகள் மற்றும் மனித உள்ளங்களின் புரட்சிகள், அறிவியலின் ஆக்கப்பணிகள் இன்று உலகளாவிய ரீதியில் புகட்டும் பாடங்களும் படைக்கும் சாதனைகளும் அளப்பரியனவாகி வருவதனை நாம் காணுகின்றோம். மனித வளர்ச்சியின் உயர் நிலை காலமாக கருதப்படும் இக்காலத்தில் உலக வலைப்பின்னல் கணனியூடாக கண்டதையும் கண்டு கொள்ளும் யுகத்தில் மனிதன் வீறுநடைபோட்டுக் கொண்டிருக்க, அநீதிகள் அரங்கேறுகின்றன. சாக்கடைகள் சரித்திரமாகின்றன. மனித மாண்பியல் வீழ்ச்சியடைகின்றன.

இந்த வேளையில் "சமாதானம் செய்வோர் பேறுபெற்றார். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்" என்று கூறி எம்மத்தியில் வந்து பிறக்கின்ற கிறிஸ்து தன் பிறப்போடு கொண்டு வந்த சமாதானம் கேள்விக் குறியாகின்றது. இன்று இந்த துர்ப்பாக்கிய நிலையை எங்கனம் நாம் எழுச்சி உடையதாக்க முடியும் என்பதே எல்லோரினதும் உள்ளக் குமுறலாக உள்ளது.

### இன்று இயேசுவின் பிறப்பை எதிர்கொள்ளும் மனிதர்கள்

கிறிஸ்து கொண்டு வந்த சமாதானத்தை கிறிஸ்துவில் தேட முயலாது மனிதர்களிடையே தேடியதன் விளைவே இன்று மண்ணிலே அரங்கேறும் அசிங்கங்கள். இவை அனைவரும் கூறுவது, அமைதி அரும்பிலே அழியப்போவதற்கான அறிகுறிகள். இன்று சிலரோ விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டு இறைவனின் பிறப்பை எதிர் கொள்கின்றனர்.

வெளிநாட்டு மோகத்தால், நுகர்வுக் கலா சாரத்தில் சிக்குண்ட பாதை தெரியாத போதைமருந்துகளுக்குள் தம்மைதொலைத்தவர்கள், ஆடம்பரக் கனவுகளுக்குள் தம்மை அடகு வைத்தவர்கள், மாற்றம் காணமறுக் கும் இச்சைகள் குவிந்த பச்சை எண்ணங் களில் திழைத்தவர்கள், போகும் இடம் தெரியாது போதை முகத்தோடு நடப்பவர்கள், வன் முறைகளை சுமந்து வறட்டு உள்ளத்தோடு வலம் வருபவர்கள், பொன்னான நேரங் களை தொலைக்காட்சிக்கு முன் னாள் தொலைப் பவர்கள், போனிலே பேசியே காலத்தை வீணடிப்பவர்கள் என்று இறைவனின் பிறப்பை எதிர்கொள்ளுகின்றனர் இன்னொரு வகை மனிதர் கூட்டம்.

### இவர்களுக்கெல்லாம் கிறிஸ்துவின் பிறப்புக்கூறும் நற்செய்தி

"வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார்" (யோவான் 1:14) விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்தார். அவர் வரவு கொண்டு வந்தது ஏழைகள் மனதிற்கு மகிழ்ச்சி. அடிமைப்பட்டோருக்கு விடுதலை, ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு, சுமை சுமப்போருக்கு இளைப்பாறுதல், தாகமாய் இருப்போருக்கு நீர், நோயிலிருப்போருக்கு குணமாக்கல், பட்டினியிலிருப்பவர்களுக்கு உணவு, பிரச்சினையிலிருப்போருக்கு தீர்வு என்னும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியே ஆகும். வந்தவர் நின்றுவிடவில்லை. ஆயனில்லா ஆடுகளை அரவணைத்தார். பாவிகளை தேடிச் சென்றனர். ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு என முழங்கினார். சமூகச் சாக்கடையிலிருப்போருக்கு அருள்தரும் ஆண்டினை உரைத்தார். மானிடத்தை அழிக்க பயன்படுத்திய போர் வாள்களை மண்ணை பண்படுத்தும் கலப்பையாக்கினார். மக்கள் இனங்கள் இடையே போர் பயிற்சியை அல்ல அன்பியப் பயிற்சியை நடத்தினார்.

இதனால் பறந்தது தனி உடைமை, பிறந்தது பொது உடைமை, மலர்ந்தது மகிழ்ச்சியான வாழ்வு, அழிந்தது ஆட்சியாளர்கள் ஆதிக்கம், அகன்றொழிந்தது ஆணவத்தின் ஆட்சி, ஒளிர்ந்தது ஒளியின் ஆட்சி, சுடர் ஆனார் பிறந்த இயேசுபாலன். கடவுள் தன்மையில் விளங்கிய அவர் மனிதனை மீட்க மனிதனாக மாறினார். அவர் செல்வராக இருந்தும் நாம் செல்வராகும் படி அவர் நமக்காக ஏழையானார்.

வார்த்தை போதனை விடுத்து வாழ்க் கைப் போதனைகளை சாதனைகளாச் சரித்திரமாக்குங்கள். சாவின் சக்திகளுக்கு சாவு மணிகள் அடியுங்கள். ஆடம்பரத்தை நாடாதே. ஆடையற்றோரை அண்டிச் செல். வீண் விரயம் செய்யாதே. வீடற்றோரை தேடிச்செல். அன்பை அறியாதவர்களை அரவணைக்க ஓடிச்செல். இயேசுவின் பாதையில் நடக்காவிட் டால் பணத்தைக்கூட்டிவைத்து புகழைப் பெருக்கி வைத்துப் பயனில்லை. மனம் திரும்பவேண்டும். மனிதம் மலரவேண்டும். மனிதநேயமும் மாட்சிபெறவேண்டும். உதவும் உயர்குணம் உருப்பெறவேண்டும். துவேசமில்லாத தூயவர்கள் வளரவேண்டும். ஒவ்வொரு மனிதனும் இந்த கிறிஸ்து பிறப்பு விழாவிலிருந்து பாலன் இயேசு உறையும் நடமாடும் நற் கருணை பேழையாகவேண்டும். இவை தான் இன்று நம்மை நோக்கிப்பிறந்த பாலன் இயேசு எம்மிடம் விரும்பும் மாற்றம். எனவே எம்மை விட்டு அத்தனை அசிங்கங்களையும் அகற்றுவோம்.

எம் இதயங்களை எல்லாம் ஆவியானவரின் ஆலயமாக்குவோம். இறை மாண்பையும் அன்பையும் புதிய பார்வையையும் நம் செயற்பாடுகளில் நல்லமைதியைத் தேடி நம்மில் உருவாக்குவோம். அப்போது உதயமாகும் உன்னதரின் ஆட்சி. நம் இதயக் குகைகளில் இயேசு பாலன் எம் ஆன்மாவில் என்றும் அழியாது முத்திரை பதிப்போம். உலகில் ஒளியான இயேசு நம் வாழ்வில் சுடர் விட்டு ஒளிர்வார்.



கிறிஸ்மஸ் பெருவிழா நாள்தோறும் நம்மில் அர்த்தம் பெறும். கிறிஸ்து கொண்டு வந்த சமாதானம் நம்மிடையே தங்கும். அன்பு கலாசாரத்தில் ஒரு அகிலம் உருவா கும். புதிய பார்வையுடன் புலரும் ஒரு புத் தாண்டு. மகிழும் இதயமெல்லாம் இறை வன் வரவு கண்டு உலகில் அவருக்கு உகந் தோருக்கு அமைதி உண்டாக்குக என்ற நற்செய்தி நம் உள்ளமெங்கும் ஒலிக்கட்டும். அப்போது "அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக் கொள்ள வில்லை" என்னும் வரிகள் மாற்றப்பட்டு "அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக் கொண்டார்". என்னும் புதிய வரிகள் இந்த கிறிஸ்து பிறப்பு விழாவில் நாம் எழுதுவோம்.

*நத்தார்., புதுவருட வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்.*

**ம. பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.**

உலகிற்கு ஒளியேற்ற பாலகனே பிறந்திடுவாய்!
நத்தார் புதுவருடத்தைமுன்னிட்டு எமது மூன்று கிளைகளும் நியரயமான விலையிலும் விசேட விலைக்கழிவுடனும் பெற்றுக்கொள்ளலாம்.
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு 7 நாட்களும் திறந்திருக்கும்
Nallur Saravana Tex
நல்லூர் சரவணா ரெக்ஸ்
(சி-5272)


இல. 526,529, பருத்தித்துறை வீதி
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 1723
இல. 770, 772, தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே :- 021 222 0421
இல. 171, பிரதான வீதி
சம்பத்வங்கிக்கு அருகாமை,
நெல்லியடி.
தொ.பே:- 021 226 2992

நத்தார் திருநாளில் இல்லங்களில் இன்ப ஒளி வீசட்டும்
உடல் வளர்ச்சிக்கு
ஜீவாகாரம்
உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்தசத்துணவு. இரசாயனக் கலவை அற்றது


உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
அண்ணா தயாரிப்புக்களே!
அண்ணா கோப்பி
அண்ணா அரிசி மா
குரக்கன் மா
ஆட்டா மா
அண்ணா மிளகாய்த் தூள் வகைகள்
அண்ணா பத்தி வகைகள்
அண்ணா பற்பொடி
அண்ணா இனிப்பு வகைகள்
அண்ணா தொழிலகம்
இணுவில்
தொலைபேசி இல: 021 224 1565

# கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பு;
## கிளிநொச்சி நகரம் அதிர்ச்சியில்



(மல்லாவி)

கிளிநொச்சி நகர வர்த்தக நிலையங்களில் தொடர் கொள்ளைச் சம்பவத்தால் வர்த்தகர்கள் மத்தியில் அச்சநிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி நகரவர்த்தக நிலையங்கள் மீது கடந்த சில நாட்களாகத் தொடர் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்தவகையில் கடந்த 21ஆம் திகதி கிளிநொச்சி கரடிப்போக்கு இடத்திற்கு அருகில் உள்ள புவியரசன் சிங்கர் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்கின்ற விற்பனை நிலையத்தின் கதவினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த பணம், சிடிபிளேயர் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதேவேளை கடந்த 22ஆம் திகதி கிளிநொச்சி நகரத்தில் உள்ள கரடிப்போக்கு சந்தி என்கிற இடத்தில் 3 கடைகளில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதில் கற்பக விநாயகர் வர்த்தக நிலையம். மாணிக்கப்பிள்ளையார் இயந்திர ஒயில் விற்பனை நிலையத்தில் அதிகாலை 2.45 மணிக்கு உள்நுழைந்து பொருட்களையும் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

அதே வேளை அருகில் உள்ள வேறு ஒரு விற் பனை நிலையத்தை உடைத்து உள்நுழைய முனைந்த போது அங்கிருந்த கடை உரிமையாளரும் அவரது சகோதரரும் கூச்சலிட்ட போது திருடர்கள் முச்சக்கரவண்டியில் தப்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி பரந்தன் சந்தியில் உள்ள நிலா பல்பொருள் வாணிப நிலையத்தின் கூரை வழியாக உள்நுழைந்த திருடர்கள் தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகளையும் 50ஆயிரம் ரூபா பணத்தையும் திருடியதுடன் அருகிலிருந்த கடல்மதி வர்த்தக நிலையத்தின் கூரை வழியாக உள்நுழைந்து ரூபா 2 இலட்சம் பெறுமதியான பொருட்களையும் கொள்ளை யடித்துச் சென்றுள்ளனர்.

மேற் படி கொள்ளைகள் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸாரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (அ-3-15)

# விசேட பஜனை நிகழ்வு


(யாழ்ப்பாணம்)

இராம கிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் விசேட பஜனை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இலக்கம் 15, மருதனார் மடம் வீதி, உரும்பிராய் சந்தியிலுள்ள மிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஸ்ரீமத் சுவாமி ஞானமேதானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார் என இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் பிராந்திய இணைப்பாளர் சிவமோகன் அறிவித்துள்ளார். (அ)

# திருவெம்பாவை

முழங்காவில் செல்வயோக சித்தி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி திருவெம்பாவை பூஜை அதிகாலை 3.30 இற்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறுமென ஆலய பிரதம குரு எஸ்.ஜெகநாதக் குருக்கள் தெரிவித்துள்ளார். (அ)



2011 ஆம் ஆண்டிற்கான சிற்பத்துறைக்கான கலாபூசணம் விருதினை கோண்டாவில் மேற்கினைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகராசாவுக்கு கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் டீ.பி.ஏக்கநாயக்க வழங்குவதை படத்தில் காணலாம்.

# முறைகேடுகள் நிரூபிக்கப்பட்டால்
## பதவி விலக தயாராகவுள்ளேன்
### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் பதவி விலகத் தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர் உள்ளிட்ட முக்கிய பதவிகளுக்காக கடந்த 19 ஆம் திகதி நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் முறைகேடுகள் இடம்பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முறைகேடுகள் இடம்பெற்றதாக ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டால் பதவி விலகத் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாக்கெடுப்பு நடத்தப்பட்ட விதம் மற்றும் வாக்குகள் எண்ணப்பட்டவிதம் ஆகியன வெளிப்படைத்தன்மையுடன் நடைபெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

முறைகேடுகள் நடைபெற்றிருந்தால் அது தொடர்பில் கட்சியின் செயற்குழுவில் முறைப்பாடு செய்யப்பட வேண்டுமே தவிர ஊடகங்களில் பிரசாரம் செய்வது பொருத்தமற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் தயாசிறி ஜயசேகர பதவியை துறக்க வேண்டும். இந்த சவாலை ஏற்றுக் கொள்ளத் தயாரா? எனவும் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, வாக்கெடுப்பு நியாயமான முறையில் நடைபெறவில்லை என தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

வாக்குச் சீட்டுக்களில் இலக்கங்கள் பொறிக்கப்பட்டிருந்ததாகவும் இரகசிய வாக்கெடுப்பு எனத் தெரிவித்த போதிலும் இவ்வாறு இலக்கங்களை பொறிப்பதன் மூலம் வாக்களித்தவர்கள் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பொலிஸ் ஆயுதக்குழுவுக்கு இடையில்
## பரஸ்பர துப்பாக்கிச் சூடு- இருவர் பலி

மித்தெனிய ஜுலம்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள பாழடைந்த வீடொன்றுக்குள் பொலிஸாருக்கும் ஆயுத குழுவொன்றுக்கும் இடையில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு ஆயுததாரிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் கொல்லப்பட்ட ஆயுததாரிகள் இராணுவ சீருடையை ஒத்த ஆடைகளை அணிந்திருந்தனர் என்றும் மேலும் இரு ஆயுததாரிகள் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் குறித்து கிடைக்கப்பெற்ற இரகசிய. தகவலை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே மேற்படி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தில் கொல்லப்பட்ட ஆயுததாரிகளிடமிருந்து ரீ 56 ரக துப்பாக்கியொன்று கைப்பற்றப்பட்டதாக தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மித்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார். (அ-2)






# ஆயுத விற்பனையில் ரஷ்யா இரண்டாமிடத்தை பிடித்தது

(மொஸ்கோ)

உலக அளவில் ஆயுத விற்பனையில் ரஷ்யா இரண்டாம் இடத்தை பிடித்துள்ளதாக உலக ஆயுத வர்த்தக மையத்தின் தலைவர் கோரோட்சென்கோ தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு ரஷ்யா ஆயுதங்களை விற்பனை செய்ததன் மூலம் 11.29 பில்லியன் டொலரை பெற்றுள்ளது. இது சர்வதேச அளவில் 16.1 சதவீதமாகும். எதிர்வரும் 2012 ஆம் ஆண்டில் 17.3 சதவீதமாக அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயம் அமெரிக்கா 28.76 பில்லியன் டொலர் அளவிற்கு விற்பனை செய்துள்ளது. இது 40 சதவீத அளவாகும். இந்த இரு நாடுகளுக்கு அடுத்தபடியாக பிரான்ஸ், ஜேர்மன், பிரிட்டன், இத்தாலி, இஸ்ரேல், ஸ்பெயின், சுவீடன், சீனா ஆகிய நாடுகள் இடம்பெறுகின்றன. அதேபோல் ரஷ்யா 100 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்துவருகிறது. அவைகளில் இந்தியா, அல்ஜீரியா, சீனா, வெனிசுலா, மலேசியா, சிரியா, வியட்நாம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. (அ-2)




# பாக். அரசை பதவியிலிருந்து நீக்கும் திட்டம் எதுவும் இராணுவத்திடமில்லை

பாகிஸ்தானின் ஆட்சியை இராணுவம் பொறுப்பேற்கப் போவதாக வந்த செய்திகள் தவறான்வை என்று அந்நாட்டின் இராணுவத்தின் தலைவரான ஜெனரல் அஸ்பாக் கயானி கூறியுள்ளார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை பதவியை விட்டு நீக்குவதற்கான சதி மேற்கொள்ளப்படுவதாக பிரதமர் யூசுப் ரசா கிலானி கடந்த 22 ஆம் திகதி கூறியிருந்தார்.

இது குறித்து கயானி கூறுகையில், இப்படி சொல்வது உண்மையான பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்புவதை நோக்கமாகக் கொண்டது என்றும் பாகிஸ்தானின் இராணுவம் தொடர்ந்தும் ஜனநாயகத்துக்கு தனது ஆதரவை வழங்கும் என்றும் இராணுவப்புரட்சி குறித்த செய்திகள் வெறும் தவறான தகவல் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாங்கத்தை பதவியிலிருந்து நீக்குவதற்கான திட்டம் எதுவும் இராணுவத்திடம் கிடையாது என்றும் அரசாங்கத்துக்குள்ளேயே அதனை அதிகாரம் செய்யும் இன்னுமொரு அரசாக இராணுவம் இருக்காது என்றும் கூறியுள்ளார்.



பாகிஸ்தானிய இராணுவத்தை பலவீனப்படுத்துவதற்கு அமெரிக்காவின் உதவியை பாகிஸ்தானிய அரசாங்கம் நாடுவதாக கூறப்படும் ஒரு குறிப்பு கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அரசாங்கத்துக்கும் இராணுவத்துக்கும் இடையிலான இந்தச் சர்ச்சை அதிகரிக்கத்தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஆங் சான் சூகி தனது கட்சியை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்தார்



(நெபைடா)

மியன்மார் ஜனநாயகத் தலைவர் ஆங்சான் சூகி தனது கட்சியை நேற்று முன்தினம் அந்நாட்டு தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்தார். அத்தோடு முதன்முறையாக பாராளுமன்றத்திற்கும் சென்றார். மியன்மாரில் இராணுவ ஆட்சி முடிவடைந்து தற்போது பாராளுமன்றத்தில் ஜனநாயக ஆட்சி நடந்து வருகிறது. அந்நாட்டின் மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்காக ஜனாதிபதி தெய்ன் செய்ன் நாடு ஜனநாயக வழியில் செல்லும் என உறுதியளித்தார்.

தேசிய ஜனநாயக அரசியலில் மீண்டும் கலந்து கொள்ளும் முயற்சியாக வரவிருக்கும் இடைத்தேர்தல் ஒன்றில் போட்டியிடப் போவதாக ஆங் சான் சூகி அறிவித்தார். அதற்கு ஏதுவாக தனது கட்சியை மீண்டும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொண்டார். தொடர்ந்து அன்றையதினம் தலைநகர் நெபைடாவாவில் உள்ள பாரளுமன்றிற்குச் சென்று கீழவை மற்றும் மேலவை சபாநாயகர்களைச் சந்தித்துப் பேசினார். (அ-2)

# துருக்கி நாட்டுக்கு எதிரான தீர்மானம் பிரான்ஸ் நாடாளுமன்றில் நிறைவேற்றம்

முதலாம் உலகப் போரில் ஒட்டோமான் பேரரசு நடத்திய போரை இனப்படுகொலை என்று கூறி பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் ஒரு மசோதா நிறைவேற்றப்போகிறது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த துருக்கி தனது பிரான்ஸ் நாட்டுத் தூதுவரிடம் தாய் நாடு திரும்புமாறு கூறி விட்டது.

அன்று படுகொலை செய்யப்பட்ட ஆர்மீனியர்களில் ஏராளமான துருக்கியர்களும் உண்டு என்பதால் துருக்கி இந்தப் போரை இனப்படுகொலை என்று பிரான்ஸ் தெரிவிப்பதை ஏற்க மறுக்கின்றது.


இந்நிலையில் இந்த மசோதாவை பிரான்ஸ் நாட்டின் அனைத்துக் கட்சிகளிலும் இருந்த 50 சட்ட அறிஞர்கள் ஆதரித்தனர். 6 பேர் மட்டுமே எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அடுத்து செனட்டிலும் நாடாளுமன்றக் குழுக்களிலும் இந்தச் சட்ட மசோதா விவாதிக்கப்பட்டு சட்டமாக்கப்படும். இந்தச் சட்டப்படி பிரான்ஸில் வாழ்பவர் ஆர்மீனியப்படுகொலையை இனப்படுகொலை என்று அழைக்க மறுத்தால் அவருக்கு ஓராண்டு சிறைத்தண்டனையும் 45 ஆயிரம் யூரோ அபராதமும் விதிக்கப்படும்.

ஆனால் ஆர்மீனியா நாட்டின் வெளிவிவகாரத் துறை அமைச்சர் தங்கள் இனம் ஒட்டோமான் பேரரசின் தாக்குதலுக்கு அஞ்சி உலகம் முழுக்க சிதறிப்போனதை நினைத்து வருந்திய நிலையில் இப்போது பிரான்ஸ் துருக்கி மீது தொடுத்திருக்கும் அழுத்தமான குற்றச்சாட்டை பாராட்டி இருக்கிறார்.

உலகளாவிய மனித மாண்பை மதிக்க பிரான்ஸ் நாடு எப்போதுமே தவறுவதில்லை என்று அவர் கூறியுள்ளார். (அ-2)

# உலகின் மிக வயதான யோகா ஆசிரியர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தார்



அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை சேர்ந்த 91 வயதான பெண்மணி ஒருவர் மிக வயதான யோகா ஆசிரியர் என கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார்.

பெர்னிஸ் பேட்ஸ் என்ற அப்பெண்மணி கடந்த 50 வருடங்களாக யோகா செய்து வருகிறார். அவருக்கு 70,80 மற்றும் 90 வயதுகளில் மாணவர்களும் உள்ளனர். யோகா தனக்கு பலத்தையும் எதையும் அனுபவிக்கும் தன்மையும் அளிப்பதாக பேட்ஸ் தெரிவித்துள்ளார்.

91 வயதான பேட்ஸ் தற்போதும் எடைகளை தூக்குதல், நீச்சலடித்தல் உள்ள உடற்பயிற்சிகளையும் செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இரு கார்க்குண்டுத்தாக்குதலில் 40 பேர் பலி; 100 பேர் காயம்

(பெய்ரூட்)

சிரியாவில் ஜனாதிபதி பஷீர் அல் ஆசாத்துக்கு எதிராக கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. இதில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியானார்கள். இந்நிலையில் தலைநகர் டமாஸ்கஸ் நகரில் நேற்று முன்தினம் பாதுகாப்பு படையினர் நின்ற இடத்தின் அருகே 2 கார்க் குண்டுகள் வெடித்தன. இந்த தாக்குதலை அல்கொய்தா தற்கொலை படை தீவிரவாதிகள் நடத்தியதாக சிரியா நாட்டின் தனியார் தொலைக்காட்சி அறிவித்தது.

இந்தக் குண்டுவெடிப்பில் இராணுவத்தினர், பொதுமக்கள் உட்பட 40 பேர் உயிரிழந்தனர். சுமார் 100 பேர் படுகாயம் அடைந்தனர். பலியானவர்களில் பெரும்பாலானோர் பொதுமக்கள் ஆவார்கள்.

சிரியாவில் கிளர்ச்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்காக அரபு நாடுகளின் குழுவினர் அண்மையில் சிரியாவுக்கு சென்றனர். இதற்கு மறுநாளே இந்தக் குண்டு வெடிப்பு நடந்தது. (அ-2)

# பாக்.-அமெரிக்கா உறவு விரிசல்; சீன தூதர் பாகிஸ்தான் பயணம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான்-அமெரிக்கா இடையிலான உறவு பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் சீன அரசின் தூதர் டாய் பிங்குவோ இஸ்லாமாபாத் சென்றுள்ளார். அங்கு பிரதமர் யூசுப் ரசா கிலானியுடன் பேச்சு நடத்திய அவர் வெளியுறவு அமைச்சர் ஹினா ரப்பானி ஹாரையும் சந்தித்தார். அப்போது இருநாட்டு உறவை மேம்படுத்துவது பற்றி தலைவர்கள் விவாதித்தனர். மேலும் நேட்டோ படையின் தாக்குதலை அடுத்து பாகிஸ்தானின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும் என டாய் பிக்வோ வலியுறுத்தியிருக்கிறார்.

மேலும் அவரது இந்தக் கருத்துக்கு அமைச்சரவை ஹினா ரப்பானி நன்றி தெரிவித்து கொண்டதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் செய்தி வெளியிட்டுள்ளது. சீன அரசின் தூதர் ஜனாதிபதி சர்தாரியை சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த மாதம் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் வீரர்கள் 24 பேர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து அமெரிக்கா- பாகிஸ்தான் இடையிலான இரு தரப்பு உறவில் விரிசல் ஏற்பட்டிருக்கிறது. (அ-2)




# வருமானவரி குறைப்புக்கு குடியரசுக்கட்சி ஒப்புதல்

இரண்டு மாதத்துக்கு வருமானவரி குறைப்பு செய்யும் ஜனாதிபதி ஒபாமாவின் முடிவுக்கு குடியரசு கட்சி ஒப்புதல் அளித்துள்ளது.

நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் குடியரசுக்கட்சிக்கு அதிக பிரதிநிதிகள் இருந்த போதிலும் ஜனாதிபதியின் முடிவுக்கு அக்கட்சி ஒப்புதல் அளித்துள்ளது அரசியல் நோக்கர்களிடையே பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ள சூழலில் இத்தகைய முடிவு ஜனாதிபதியின் வெற்றி வாய்ப்பை பிரகாசப்படுத்தும் என்று கருதப்படுகிறது.

இரு அவைகளிலும் இத்தீர்மானம் வெற்றி பெற்றதை ஒபாமா வரவேற்றுள்ளார். (அ-2)



செக் குடியரசின் முன்னாள் ஜனாதிபதி வாக்லவ் ஹவேல், அண்மையில் காலமானார். அவரது இறுதிச்சடங்கு பிராக் நகரில் உள்ள கதீட்ரல் சர்ச்சில் நடைபெற்றது. இதில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் உள்ளிட்டோர் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

தந்தையாம் இறைவன் ,என்னில் இருக்கிறார். நான் அவரில் இருக்கிறேன்.

*- இயேசு(விவிலியம்)*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வணக்கத்துக்குரிய சிலுவையின் அடையாளம் குறிப்பது என்ன?

யேசு பாலனின் பிறப்பை உலகம் இன்றைய நாளில் போற்றித் துதி செய்கின்றது.

இப்பூவுலகில் படைக்கப்பட்ட மானிடர்கள் தங்களின் கடமைகளை மறந்து பாவ வழிகளில் பயணிக்கத் தலைப்பட்டவேளை அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக யேசுபாலன் பிறந்தார்.

மேய்ப்பன் இல்லாத மந்தைக் கூட்டம் எங்ஙனம் பாதை மாறிச் சென்று குள்ள நரிக்கும் கொடிய சிங்கத்திற்கும் இரையாகிக் கொள்ளுமோ அதுபோன்றே மனித குலமும் வழிப்படுத்தல் இல்லையேல் போதைப் பொருளுக்கும் மதுவுக்கும் மாமிசத்திற்கும் அடிமைப்பட்டு களவு, கயமை உள்ளிட்ட பஞ்சமா பாதகங்களைப் புரிந்து தம்மை சின்னாபின்னப்படுத்திக் கொள்வர்.

எனவே மனுக்குலத்திற்கும் மேய்ப்பன் அவசியமாகும். இங்கு மனுக்குலத்தின் மேய்ப்பனாக இருக்கக்கூடியவர் இறைபரம்பொருள் ஒருவர் என்பதையே நத்தார் பெருநாளின் தத்துவம் உணர்த்தி நிற்கின்றது.

யார் எச்சமயம் சார்ந்திருந்தாலும் அச்சமயம் கூறுகின்ற முழுமுதற் கடவுளரே அவரவரை நல்வழிப்படுத்தும் பேரொளியாகும்.

எனவே எல்லாச் சமயங்களும் கூறுகின்ற இறை தத்துவம் மனித வாழ்வின் மேன்மைக் கானதாகும்.

ஆகவே சமயம் சார்ந்த நிலையில் நின்று மனிதகுலம் போட்டியிடாமல் சமாதானத்தின் ஊடாக மானிடத்தை வழிப்படுத்தவும் ஒழுங்கு படுத்தவும் முன்வரவேண்டும்.

யேசுபாலனின் பிறப்பை நினைவுறுத்தி வழிபாடாற்றப்படும் இன்றைய நத்தார் பெருநாளில் இறைவனின் பெயரால் நாம் கேட்பதெல்லாம் எங்கள் தமிழ் இனத்தின் விடிவிற்காக நாம் எல்லோரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்பதாகும்.

குறிப்பாக இலங்கை முழுவதிலும் இருக்கக்கூடிய கத்தோலிக்க மற்றும் தென்னிந்தியத் திருச்சபை உள்ளிட்ட அத்தனை திருச்சபைகளின் ஆயர்களும் ஒன்றிணைந்து-மனம் ஒருமித்து தமிழ் மக்களின் அவலம் போக்கப் பாடுபட வேண்டும்.

இருந்தும் ஆயர்கள் சிலர் தாம் கருத்துத் தெரிவித்தால் அரசைப் பகைத்துக்கொள்ள வேண்டிவரும் என்று நினைக்கிறார்கள்.

மேதகு ஆயர் பெருமக்களே! உங்கள் கழுத்தில் தொங்கும் திருச்சிலுவையின் தத்துவத்தை ஒரு கணம் சிந்தியுங்கள்.

மனுக்குலத்தின் பாவத்தை ஏற்றுக்கொண்ட யேசுபிரானின் அடையாளச் சின்னமல்லவா அது!

வணக்கத்துக்குரிய அந்த அடையாளச் சின்னம் உங்கள் இதயங்களை தொட்டுக் கொள்கிறதல்லவா!

அப்படியானால், வெந்து தணலாகி நீறாகிப் போன இந்த மண்ணில் வாழத்துடிக்கும் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதில் இருந்து நீங்கள் இலாவகமாக விலகிக்கொள்ள நினைப்பது ஏன்?

இதுதான் இராஜதந்திரம் என்றால் யேசு பாலனின் பிறப்பின் மகிமையை காப்பாற்றுவது யார்?

தமிழ்ப் பகுதிகளில் இருக்கக்கூடிய மேதகு ஆயர் பெருமக்களேனும் தமிழ் அரசியல் தலைமைகளை ஒற்றுமைப்படுத்தி அவர்களை வழிப்படுத்தி தமிழினத்தை ஒரே பாதையில் பயணிக்கச் செய்து உரிமையை வென்றெடுக்கும் வழிகளை தீட்ட வேண்டும்.

இத்திட்டத்தை ஆயர்கள் சிலர் போற்றுதற்குரிய வகையில் செய்கிறார்களாயினும் விலகு நிலையில் இருப்போரும் உள்வரவேண்டும் என இறைவனின் பெயரால் இப்புனித நாளில் அழைக்கிறோம்.வருக!

# கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த குடும்பஸ்தர் மாரடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மாரடைப்பால் நடுக் கடலிலேயே உயிரிழந்தார்.

குருநகர் கடற்கரை வீதியினைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான அருளப்பு மரியநாயகம் (வயது-70) என்பவரே உயி ரிழந்தவராவார்.

கடந்த புதன்கிழமை இரவு 12 மணிக்கு கடற்தொழிலுக்கு இரண்டு பேரோடு குறித்த நபர் சென்றிருந்தார். நடுக் கடலில் மீன் பிடித் துக் கொண்டு இருந்த போது திடீர் என மாரடைப்பு ஏற்பட்டதனைத் தொடர்ந்து கரை நோக்கி கப்பலை திருப்ப முயன்றார். எனினும் அதிகாலை 4 மணியளவில் அவர் உயிரிழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்பு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-4)

# இலவச நாட்காட்டியை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

காயத்திரி பப்ளிகேஷன் நிறுவனத்தினால் காயத்திரி அம்மனின் படத்துடன் சகல அரச, பொது விடுமுறை தினங்களையும் உள்ளடக்கிய கையடக்க கலண்டர்கள் இந்து ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள், பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள் ளன. இக் கையடக்க கலண்டர்களை பெற்றுக் கொள்ள விரும்புவோர் 9X4 அங்குல அளவுள்ள நீளக் கடித உறையில் தமது சுய முகவரியை எழுதி 5 ரூபா பெறுமதியுடைய முத்திரை ஒட்டி பின்னர் அதனை வேறொரு கடிதவுறையில் வைத்து வே. நவமோகன், காயத்திரி பப்ளிகே ஷன், இல 9-1/1, ஸ்ரீ சரணங்கர வீதி, களுபோவில, தெஹிவளை என்னும் முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலமோ அல்லது நேரடியாகவோ பெற்றுக் கொள்ள முடியும். இக்கடிதவுறையின் மேற்பக்க மூலையில் காயத்திரி கையடக்க கலண்டர் என குறிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# விக்கிரக திருடன் அகப்பட்டான்

(கரவெட்டி)

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வடமராட்சிக்கு உட்பட்ட பகுதியில் ஆலய விக்கிரகங்களின் திருட்டு சம்பவங்களோடு தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொடிகாமத்துக்கு விக்கிரகம் ஒன்றினை கடத்த முற்பட்ட போது கற்கோவள பகுதி மக்களால் பிரஸ்தாப நபர் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கற்கோவளம் முச்சந்தி பிள்ளையார் கோயில் விக்கிரம் ஒன்றும், புலோலி தெற்கு விநாயகர் ஆலயத்தில் மோட்டர் ஒன்றும் சில நட்களுக்கு முன் காணமல்போனமை குறிப்பிடத்தக்கது. (அ-24)

# மின்விநியோகம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோகமார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால் நாளை திங்கட்கிழமை, 28 ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான்,மயிலங்காடு,ஏழாலை, காங் கேசன்துறை உயர்பாது காப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களிலும்,

27 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை, எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக் கிழமை மற்றும் 31 ஆம் திகதி சனிக் கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம் மருத்து வபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# முகவரி அழிந்தவர்களுக்கு முகமானவரை எம் உள்ளங்களில் பிறக்கச் செய்வோம்

ஆண்டவரின் பிறப்பை ஆன்மீகப் பலன் தரும் வகையில் கொண்டாட வாழ்த்துக்கள். மானிடரின் முழு விடுதலைக்காகத் தன்னையே கையளித்த இறைமகன் இயேசு. உண்மையாகவே மானுடத்திற்கு விடுதலை அளிக்க மனிதரின் மாண்பினை மீட்டெடுக்க வந்துள்ளார் என்பதை உணர்ந்து மகிழ்வோம். கிறிஸ்மஸ் சுட்டிக்காட்டுவது சிலுவையிலும் உயிர்ப்பின் மகிழ்விலும் வெற்றியாக பெறப்பட்ட மீட்பையே நம் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் நம்மருகே இருக்கிறார் என்ற உணர்வில் பெறும் மகிழ்வால் இந்த கிறிஸ்மஸ் பெருவிழா நம்மை நிறைப்பதாக அமையவேண்டும்.

ஓவியம் என்பது கற்பனை உலகம், மொழிகள் அவரின் நிரந்தர நிஜ மாக இருக்கப்போகின்ற பிரசன்னத்தை எடுத்துரைக்கின்றன.

நற்செய்தியில் லூக்கா இயேசுவின் பிறப்பை உரோமை ஆளுநர் செசார் அகுஸ்து ஆட்சி பின்னணி யில் அமைக்கின்றார். மற்றும் இயேசுவை பெத்தலேகமின் மையமாகவும் அழகு செய்கிறார். அங்கு மறைமுகமாக யார் தாவீதின் வழிமரபில் அரியணையில் யூதர்களின் அரசாக வருவார் என கண்டெறியும் கணக்கெடுப்பு நடந்தது. இது இயேசுவின் குடிசை காவியத்தின் முதல்படி.

யோசேப்பும்-மரியாவும் நாசரேத்திலிருந்து பெத்தலேகமைநோக்கி 80 மைல் தொலைவு கடந்து சென்றனர். அவர் இங்கு பிறந்து வளர்ந்ததினால்

## பரமபிதா காட்டிய பாதை

காவியம் என்பது நிஜ உலகம். ஓவியமான மீட்பின் வரலாறு உண்மையான காவியமாகவே இயேசு பிறப்பு விழா. இறைவன் எங்களோடு இருக்கிறார். ஆனால் இதை பொய்யென நினைத்து பிரிந்து பாதைமாறி பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டிருந்த பொழுது இறைவன் இருப்பதை உறுதிப்படுத்தி மனிதம் வாழும் சூழலில் காவியம் ஆனதே கிறிஸ்துவின் பிறப்பு.

இன்றைய முதல் வாசகத்தில் எசாயா கி.பி.8 ஆம் நூற்றாண்டில் தாவீது அரசர் இணைத்த இஸ்ராயேல் அரசு மீண்டும் பிரிந்து இருளில் இருந்தபொழுது மெசியாவின் பேரொளியை நோக்கி நம்பிக்கையிழந்த நிஜமில்லா ஓவியமான வாழ்க்கையில் இருந்து நிஜமான ஒளியான இறைவன் வருகிறார். வாருங்கள் என அழைக்கிறார். அவர் தாவீதின் வழிமரபில் வருவார். நம் முன்னோரிடம் பேசி நம்மிடம் பேசி நம் கற்பனையில் ஓவியமாய் இருக்கும் இறைவன் நமக்கு அருகாமையில் நம் மத்தியில் நம்மில் மனிதமாக வருவார் என அழைக்கின்றார். அவர் வியத்தகு ஆலோசகர். வலிமைமிகு இறைவன், என்றுமுள்ள தந்தை, அமைதியின் அரசர் என்ற அடை அவர் அதற்கு மையமாக இருந்தார். இயேசு இறைவன் மனிதமாக பெத்லேகேமின் மையமானார், காவியமானார்.

மறைக்கல்வி வகுப்பு ஒன்றில் கிறிஸ்துப் பிறப்பின் நிகழ்வை எடுத்துரைத்து அனைவரையும் அதனை ஓவியப்படமாக வரையும்படி ஆசிரியர் கேட்டார். சறு மானவன் வித்தியாசமாக குடிலில் இரண்டு குழந்தை வரைந்திருந்தான். ஏன் என்று ஆசிரியர் கேட்டபெர்ழுது நான் வரைந்தபொழுது இயேசு உன்னுடன் நான் வரலாமா என்று கேட்டார். நானோ யாருமில்லா , யாருமறியா அநாதை. வெறுப்பையும் மறுப்பையுமே சம்பாதித்தவன். எப்படி வாழ்வது என தெரியாமல் தத்தளிப்பவன் என்னுடன் நீங்கள் வாழ வரவேண்டாம் என்றேன். அப்போது இயேசு நீ என்னோடு வா. நான் உன்னோடு உனக்காக எந்நாளும் பிறந்து கொண்டேயிருப்பேன் என்று கூறினார். எனவேதான் நான் தனிமையல்ல, அநாதையல்ல, என்னிடம் இனிமேல் வெறுப்பு, மறுப்பு இல்லை. எந்நாளும் புதுபிறப்பு. ஆகவே இவ்வாறு வரைந்தேன் என்றான்.

இஸ்ரயேல் மக்களின் கற்பனையில் நிழலாடிய இறைவன் இவ்வுலகில் நிஜமானார். குடிசையில் முகவரி அழிந்தவர்களுக்கு முகமாய் உறவை இழந்தவர்களுக்கு உடன் பிறப் பாய் ஏழ்மையில் மூழ்கிப் போனவர்க ளுக்கு ஏற்ற மாய் வாழ்வில் தோற்றுப் போனவர்களுக்கு தோழனாக, அநாதைகளுக்கு அன்பனாக, நாதியற்றோர்க்கு நண்பனாக நம்முன் நம்மோடு நமக்கருகில் நடக்கின்றார். ஓவியம் காவியமாகிவிட்டது, நம்மில் கலந்துவிட்டது. மக்கள் நடுவேயுள்ள குறைபாடுகளை அகற்றும் பணி நம்மால் நடை பெற வேண்டும். உலகில் மாந் தர் உள்ளவரை இக்குறைபாடுகள் இருந்து கொண்டிருக்கும். அதுவரை யிலும் இப்பணிகள் நடைபெற வேண் டும். காலங்களைக் கடந்தவரான இறைவன் கால எல்லைக்குள் வந்து இப்பணிகளை எல்லோரும் எல்லோருக்கும் செய்யவேண்டும் என உணர்த்தினார். இன்று கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடும் நாம் இயன்ற அளவில் இப்பணியைச் செய்யவேண்டும். இந்தப்பணிகளை செய்து ஆண் டவர் முன் நிற்போம். அப்போது நாம் கொள்ளும் மகிழ்வு அளவிட முடியாததாக இருக்கும். இயேசுவுடன் இணைந்து நின்று புதிய இயேசுவாக நாம் மாறுவோம். பிறப்போம். நாம் பெற்ற பெருவாழ்வை நம்மைச் சுற்றி வாழ்வோரும் பெறச் செய்து புதிய சமுதாயமாக அவர்களையும் பிறக்கச் செய்வோம். இந்த நல்ல உணர்வுகளை மகிமைமிகு இயேசு பிறப்பு பெருவிழாவில் பெற்றவராய் இயேசுவை நம் உள்ளங்களில் பிறக்கச் செய்வோம்.



*ம. பிரான்சிஸ்க்*
*கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.*

# குடியரசு தினத்தையொட்டி டில்லியில் பலத்த பாதுகாப்பு



(புதுடில்லி)

கிறிஸ்மஸ் புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டியும் நாளை திங்கட்கிழமை குடியரசு தின விழா நடைபெறுவதையொட்டியும் தலைநகர் டில்லியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பொலிஸார் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள். நாசவேலை சதித் திட்டத்துடன் தீவிரவாதிகள் பதுங்கி இருக்கின்றார்களா? என்று சோதனையும் நடத்தி வருகின்றார்கள்.

வடமேற்கு டில்லியின் ஷாலிமார்பாக் என்ற இடத்தில் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் அதிரடி சோதனை நடத்தியதில் பதுங்கி இருந்த ஒரு இளைஞர் பிடிபட்டார். விசாரணையில் அவர் சர்வதேச பாப்பர் கல்சா இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதி என்று தெரிய வந்தது. அவன் கொடுத்த தகவலின் பேரில் பஞ்சாபில் மேலும் ஒரு தீவிரவாதி கைது செய்யப்பட்டான்.

இவர்களை பொலிஸார் விசாரித்ததில் இருவரும் 3 அரசியல் தலைவர்களையும் மதத் தலைவர்கள் சிலரையும் தீர்த்துக்கட்ட திட்டமிட்டு இருந்ததாக தெரிவித்தனர். அவர்களது பட்டியலில் உள்ள அரசியல் மற்றும் மதத் தலைவர்கள் யார்? என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

பாப்பர் கல்சா தீவிரவாதிகள் பிடிபட்டு இருப்பதால் இவர்களுக்கும் அம்பாலா ரயில் நிலையத்தில் குண்டு வைப்புக்கும் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி கைதான இருவரிடமும் தொடர்ந்து விசாரணை நடக்கிறது. தீவிரவாதிகள் பிடிபட்டது டில்லி பஞ்சாபில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ-2)

# பாகிஸ்தான் சிறையில் உள்ள 54 கைதிகளை விடுவிக்க சர்வதேச நீதிமன்றை அணுக வேண்டும்

## மத்திய அரசுக்கு குஜராத் உச்ச நீதிமன்றம் உத்தரவு

(அகமதாபாத்)

பாகிஸ்தான் சிறைகளில் வாடும் 54 போர்க் கைதிகளை விடுவிக்க இரண்டு மாதங்களுக்குள் சர்வதேச நீதிமன்றத்தை மத்திய அரசு அணுக வேண்டும் என குஜராத் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 1971 ஆம் ஆண்டு இந்தியா- பாகிஸ்தான் இடையே போர் நிகழ்ந்தது. இந்தப்போரின் போது பாகிஸ்தான் படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய இராணுவ வீரர்கள் 54 பேர் இன்னும் அந்நாட்டு சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றனர். இவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி 1999 ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில் பாகிஸ்தான் படையினரால் கைது செய்யப்பட்டு அந்நாட்டு சிறைகளில் வாடும் இந்திய இராணுவ வீரர்களை பணியில் இருப்பவர்களாக கருத வேண்டும். அவர்களின் குடும்பத்திற்கு போதுமான இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும் என கோரியிருந்தார்.

இந்த மனு தொடர்பாக பலமுறை நோட்டீஸ் அனுப்பப்பட்டும் இராணுவ அமைச்சகம் எந்தப் பதில் மனுவும் தாக்கல் செய்யவில்லை என்பதால் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் அந்த அமைச்சகத்திற்கு குஜராத் உயர்நீதிமன்றம் அபராதம் விதித்தது. இந்நிலையில் இந்த மனு தலைமை நீதிபதி பாஸ்கர் பட்டாச்சார்யா மற்றும் நீதிபதி பர்டிவாலா ஆகியோர் அடங்கிய பெஞ்ச் முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு விபரம் வருமாறு ,சிம்லா ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் செயற்பட்டுள்ளது தெளிவாக தெரிகிறது.

அதனால் பாகிஸ்தான் சிறையில் வாடும் போர்க் கைதிகள் 54 பேரை விடுவிப்பது தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தை மத்திய அரசு அணுக வேண்டும். (அ-2)

# முல்லைப்பெரியாறு விவகாரம் குறித்து மன்மோகனுக்கு மனு கொடுக்க முடிவு

## தி.மு.க.தீர்மானம்

(சென்னை)

சென்னைக்கு வரவுள்ள பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து முல்லைப்பெரியாறு பிரச்சினை தொடர்பாக மனு கொடுக்க இருப்பதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தி.மு.க. தலைமைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,அண்ணா அறிவாலயம் முரசொலிமாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் தேனி மாவட்ட நிர்வாகிகளுடன் தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆலோசனை நடத்தினார். அப்போது அந்தப் பகுதியில் நிலவி வரும் பிரச்சினை குறித்தும் முல்லைப்பெரியாறு அணை பிரச்சினையில் தி.மு.க. சார்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை நடத்தினர்.

கேரள எல்லைப்பகுதியில் நடைபெறும் கலவரங்கள் குறித்தும் அந்த பகுதி மக்கள் மீது தமிழக பொலிஸார் நடத்திய தாக்குதல்கள் குறித்தும் தேனி மாவட்ட நிர்வாகிகள் தி.மு.க. தலைவர் கருணாநிதியிடம் விபரித்தனர். நாளை திங்கட்கிழமை இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் சென்னை வரும் போது கேரள எல்லை பகுதியில் தமிழர்கள் தாக்கப்படுவதை தடுப்பதற்கு மத்திய அரசு காலதாமதம் செய்யாமல் விரைந்து நடவடிக்கை மேற்கொள்வதுடன் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் படிமுல்லைப்பெரியாறு அணை நீரின் அளவை 142 அடியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்று தி.மு. கழகத்தின் சார்பில் தலைவர் கருணாநிதியும் பொதுச்செயலாளர் க.அன்பழகனும் மற்றும் தி.மு.க. நிர்வாகிகளும் பிரதமரை நேரில்



சந்தித்து கோரிக்கை மனு அளிப்பதென முடிவெடுக்கப்பட்டது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் தி.மு.க. பொதுச்செயலாளர் அன்பழகன், தலைமைக்கழக முதன்மை செயலாளர் ஆற்காடு வீரசாமி, துணைப் பொதுச்செயலாளர் துரைமுருகன் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர் என அதில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

# லோக்பால் மசோதா விதிகளை எதிர்க்க பா.ஜ.க. முடிபு செய்தது

(புதுடில்லி)

பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள லோக்பால் மசோதாவில் உள்ள சில விதிகளை எதிர்க்க பாரதிய ஜனதா கட்சி முடிவு செய்துள்ளது. பா.ஜ.கட்சியின் உயர்மட்டக்குழு கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

கூட்டத்திற்கு பின் நிருபர்களிடம் பேசிய கட்சியின் பொதுச் செயலர் ஆனந்த்குமார் கூறியதாவது,

அரசின் லோக்பால் மசோதாவை பா.ஜ. விரும்பவில்லை. வலுவான லோக்பால் மசோதா வேண்டும் என விரும்புகிறோம். பாராளுமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மசோதாவில் சட்ட ரீதியாகவும் அரசியல் சட்ட ரீதியாகவும் நிறைய குறைபாடுகள் உள்ளன.

நாட்டின் கூட்டாட்சி அமைப்பை சீர்குலைக்கும் வகையிலும் உள்ளது. மசோதா எதிர்வரும் 27,28 மற்றும் 29 ஆம் திகதிகளில் விவாதத்திற்கு வரும்போது அதிலுள்ள விதிமுறைகள் தொடர்பாக பா.ஜ.தரப்பில் ஆட்சேபங்கள் தெரிவிக்கப்படும். மேலும் மசோதாவில் திருத்தங்கள் செய்வதற்கான தீர்மானம் கொண்டு வரப்படும் என அவர் கூறினார். (அ-2)

# காரைக்குடிக்கு வரவுள்ள பிரதமரை எதிர்த்து கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம்

காரக்குடிக்கு நாளை திங்கட்கிழமை பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எதிராக கறுப்புக்கொடி காட்டும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, முல்லைப்பெரியாறு அணை உரிமை மீட்புக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் தனித்தனியே நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை,

பழ.நெடுமாறன்:

முல்லைப்பெரியாறு அணைப் பிச்சினையில் உச்சநீதி மன்றதீர்ப்பை நிறைவேற்ற வேண்டும். அணையைப் பாதுகாக்க மத்திய தெழிலகப் பாதுகாப்புப்படையை அனுப்பவேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கையை பிரதமர் ஏற்கவில்லை.

கூடங்குளம் அணுமின் நிலையப் பிரச்சினையில் போராட்டக் குழுவினருடன் ஒருபுறம் பேச்சு நடத்திக் கொண்டே மறுபுறம் 15 நாட்களில் அணு உலை செயற்படத் தொடங்கும் என்று அவர் அறிவித்துள்ளார் என்றார்.

இதேவேளை, வைகோ குறிப்பிடுகையில்,

முல்லைப்பெரியாறு பிரச்சினையில் தமிழகத்துக்கு துரோகம் இழைத்து வரும் மத்திய அரசைக் கண்டித்து நாளை காரைக்குடி வரும் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எதிராக ம.தி.மு.க.சார்பில் கறுப்புக் கொடி காட்டும் போராட்டம் நடைபெறும்.

இப்போராட்டத்தில் ம.தி.மு.க. துணைப்பொதுச்செயலாளர் உள்ளிட்டோர் பங்கேற்பார்கள் என்றார். இப்போராட்டம் சென்னை மெரீனா கடற்கரை கண்ணகி சிலை அருகே நடைபெறும் என அவர்கள் அறிவித்துள்ளனர். (அ-2)

# எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் முதல்வர் ஜெயலலிதா அஞ்சலி

(சென்னை)

அ.தி.மு.க. நிறுவனத்தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி.ஆரின் 24 ஆவது நினைவு தினம் நேற்று நடைபெற்றது. மெரீனா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அங்கு அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏக்கள், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், ஏராளமான பொதுமக்கள் திரண்டு இருந்தனர். ஜெயலலிதா வந்ததும் *புரட்சித் தலைவர் புகழ் வாழ்க, புரட்சித் தலைவி வாழ்க* போன்ற கோஷங்களை எழுப்பினார்கள்.

நிகழ்ச்சி முடிந்ததும் ஜெயலலிதா மேடையின் அனைத்து பகுதிகளுக்கும் சென்று தொண்டர்களைப் பார்த்து உற்சாகத்துடன் இரட்டை விரலை காண்பித்தார். பதிலுக்கு தொண்டர்களும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். (அ-2)

## பாரதச் செய்திகள்




ரஷ்ய மற்றும் செர்பியாவில் பகவத் கீதைக்கு தடைவிதித்ததை கண்டித்து டில்லியில் சிவசேனா கட்சியைச் சேர்ந்தவர்கள் ரஷ்ய தேசியக் கொடியை எரித்து ஆர்ப்பாட்டம் நடத்தியதைப் படத்தில் காணலாம்.

# வடக்கு மாகாணப் பாடசாலைகள் ஸ்தம்பிதமடைய இடமளிக்க வேண்டாம்

## தமிழர் ஆசிரியர் சங்கம் ஆளுநருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களை இடமாற்றுவது அந்தப் பாடசாலைகளை ஸ்தம்பிதமடையச் செய்யும் நடவடிக்கை என இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம், வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 23ஆம் திகதியன்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய பாடசாலைகளின் ஆசிரியர்கள் 96 பேரை அழைத்து நீங்கள் தேசிய பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் என்றும் நீங்கள் வன்னிப் பாடசாலைகளுக்கும் தீவகப் பாடசாலைகளுக்கும் வடமராட்சிக் கிழக்குப் பாடசாலைகளுக்கும் செல்வதற்கு ஆயத்தமாயிருங்கள் என்றும் 2012ஆம் ஆண்டு ஜனவரி 02ஆம் திகதி நீங்கள் உங்கள் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாது என்றும் கூறியுள்ளார். இதனை எவ்விதமான அறிவித்தலாக ஆசிரியர்கள் கொள்வது?

ஆசிரிய பரவலாக்கத்தினூடாகப் அனைத்துப் பாடசாலைகளிலுமுள்ள ஆசிரியர்களைப் பரவலாக்கம் செய்வதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் அதற்கான ஒரு நடைமுறை ஒழுங்கொன்றினைக் கல்வியமைச்சு நடைமுறைப்படுத்தி வருவதனை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மேலதிக ஆசிரியர்களை உருவாக்கியவர்கள் யார்? ஆசிரிய இடமாற்றம் எவ்வாறு நடைபெற வேண்டும்? இடமாற்றச் சபைக்கே தெரியாமல் பாடசாலை அதிபர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு இடமளித்து இப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருப்பதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சரியான முறைப்படி இவ் இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படாதவிடத்து பல்வேறுவிதமான சிக்கல்களை அது தோற்றுவிக்கும்.

மாகாணப் பாடசாலைகளில் இருந்து மேலதிக ஆசிரியர்களைப் பரவலாக்கும் முறைக்கு மாறாகத் தேசிய பாடசாலைகளில் இருந்து ஆசிரியர்களைத் தெரிவுசெய்வது என்பது தேசிய பாடசாலைகளை ஸ்தம்பிக்கச் செய்யும் நடவடிக்கையென்றே நாம் கருதுகின்றோம்.

தயவு செய்து வட மாகாணத்தின் ஆளுநர் என்ற வகையில் இந்நடைமுறையை இரத்துச்செய்து முறைப்படியான பரவலாக்கத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வட மாகாணத்திற்கென்றே புகழ் சேர்த்துத் தரும் பாடசாலைகளில் குழப்பங் கள் ஏற்படாமலிருக்கப் பொருத்தமான நடவடிக்கையினை அவசரமாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

---

## ஏ.எல்.பெறுபேறு...

அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று காலை 10.00 மணிக்கு பெறுபேறுகள் வழங்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார். (பா)




# கருணா குழுவினர் நடத்தும் விழாவில் பங்கேற்கப் போவதில்லை

## நடிகர் ஜீவா அறிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருணா குழுவினர் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பாடு செய்துள்ள புத்தாண்டு விழா கொண்டாட்டத்தில் பங்கேற்கவிருந்ததை இரத்துச் செய்துவிட்டதாக நடிகர் ஜீவா அறிவித்துள்ளார்.

சுவிற்சர்லாந்தில் நடக்கும் புத்தாண்டு விழாவில் நடிகை சங்கீதா, அவரின் கணவர் பாடகர் கிரிஸுடன் மற்றும் நடிகர் ஜீவா பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விழாவை நடத்துபவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை ஈழப்போரில் தோற்கடிக்க உதவிய கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் எனத் தான் கருதுவதால் நிகழ்ச்சியைப் புறக்கணிப்பதாக ஜீவா தெரிவித்துள்ளார்.

இதேவேளை உள்ளூர்க் கட்சிகள் முதல் உலகெங்கும் உள்ள தமிழ் அமைப்புகள் வரை ஜீவா உள்ளிட்ட நடிகர்களுக்குக் கடும் கண்டனம் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விழாவில் பங்கேற்கும் திட்டத்தை இரத்துச் செய்துவிட்டதாக ஜீவா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், எனக்குத் தமிழர் நலன் தான் முக்கியம். தமிழர் விரும்பாத எதையும் நான் செய்யமாட்டேன். எனவே எனது வெளிநாட்டுப் பயணத்தை இரத்துச்செய்துவிட்டேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# புலிகளின் புலனாய்வுப் பிரிவின் கொழும்புத் தலைவர் கைது!

## ஆங்கில ஊடகம் செய்தி

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையின் கொழும்புப் பிரிவின் பொறுப்பாளர் உள்ளிட்ட ஆறு சந்தேக நபர்களைத் தீவிரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைதுசெய்துள்ளதாகக் கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தெமட்டகொட பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் சயனைட் உட்கொண்டதாகவும் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலை வைத்தியர்களால் காப்பாற்றப்பட்டதாகவும் தீவிரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பொலிஸாரின் முன்னாள் கண்காணிப்பாளர் ஒருவரும் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகா உள்ளிட்ட பலரை இவர்கள் கொலை செய்யத் திட்டமிட்டிருந்ததாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக அவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மற்றும் அமைச்சர் மகிந்த விஜேசேகர ஆகியோர் மீதான தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு இவர்களே திட்டமிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

எனினும் இவர்கள் எப்போது கைது செய்யப்பட்டனர் என்ற விபரங்கள் குறித்து இவ்வூடகம் எதுவித தகவல்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# வட்டக்கச்சி விபத்தில் சிறுவன் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

தனியார் பேருந்தும் சைக்கிளும் விபத் துக்குள்ளானதில் சிறுவன் ஒருவன் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள் ளான்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் கிளிநொச்சி, வட்டக்கச்சி பன்னங்கண்டி ப்ாலத்தடியில் இடம்பெற்றுள்ளது.

வட்டக்கச்சி பன்னங்கண்டியடியைச் சேர்ந்த, வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் தரம் 7-ல் கல்வி பயிலும் பா.லக்ஷன் (வயது 12) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப சிறுவன் தாயாருடன் தண்ணீர் எடுக்கச்சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் எதிரே வந்த பேருந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்து சிறுவனை மோதியது. இதில் சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான்.

சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சிப் பொலிஸார் தனியார் பஸ் சாரதியை கைது செய்துள்ளனர். (பா-8, 86)

# பொலிகண்டியில் ரூ. 14 லட்சம் பெறுமதியான நகைகள் திருட்டு

(பொலிகண்டி)

பொலிகண்டி பரியன் கிளாலை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புகுந்த கொள்ளையர்கள் 14 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

வீட்டின் குளியலறை யன்னலை உடைத்து உள்நுழைந்த 3 பேர் கொண்ட திருட்டுக் குழு வீட்டு உரிமையாளரை கூரிய ஆயுதங்களைக் காட்டி மிரட்டி 30 பவுண் நகை, ரூ.45 ஆயிரம் பணம் மற்றும் மின் உபகரணங்கள், சீ.டி பிளேயர், போன் என்பவற்றை கொள்ளை அடித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர் வல்வெட்டித்துறை பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (பா-8,48)

---

## அரசாங்கத்...

தாமதத்திற்காக வருந்துகின்றேன்.

எனக்குக் கிடைக்கப்பெற்ற கடிதத்தில் அனேகர் கையெழுத்தாளர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் எவரும் அக்கடிதத்தில் கையெழுத்திட்டிருக்கவில்லை. எனினும் தங்களின் பெயர் முதன்மையாக இருந்தபடியினால் இப்பதிலைத் தங்களுக்கு எழுதத் தீர்மானித்தேன்.

தாங்கள் அனுப்பிய கடிதமானது ஊடகங்களிலும் முக்கியத்துவம் பெற்றிருந்ததை அவதானித்தேன். எனவே இப்பதிற் கடிதத்தையும் ஊடகங்களுக்குத் தெரியப்படுத்துவேன் என்பதைத் தங்களுக்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

அரசாங்கத்திற்கும் எமக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளில் இடம்பெறும் எல்லா விடயங்களையும் பொதுமக்களுக்கு வெளியிடுவது சாத்தியமற்றதாகும். எனினும் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் நடைமுறைச் சாத்தியமானதும் நிலையானதும் பெரும்பான்மையான எமது மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடியதுமான அரசியல் தீர்வை நோக்கியதாக எமது பேச்சுவார்த்தை கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

தங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் குறித்துத் தங்களோடும் ஏனையவர்களோடும் கலந்துரையாடுவதற்கு நாம் தயாராகவுள்ளோம். தங்களின் பதிலினைத் தொடர்ந்து அதற்கான ஆயத்தங்களைச் செய்து கொள்ளலாம் என தமிழ் சிவில் சமூகம் அனுப்பிய கடிதம் தொடர்பாக மன்னார் ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப்பிற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

A/L - 2014
(கலை வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்: ஜனவரி - 7
காலை 9.00 மணி
DMI Jaffna

# ஆணைக்குழு...

அறிக்கைகளைக் கொடுத்த மனித உரிமை அமைப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த அமைப்புகளின் அறிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த அமைப்புகளின் நடத்தை வருத்த மளிக்கிறது என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பான விமர்சனங் கள் வெளியாவதைத் தடுக்கும் நோக்கிலேயே இலங்கை அரசு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது. (பா)

# காணிப் பதிவுகள்...

பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் துரிதமாகப் பிம் சவிய வேலைத்திட்டத்திற்கமைய யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளான பொதுமக்களுக்குக் காணிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் மேலும் தெரிவித்தார். (பா)

## தவறிவிட்டது

நேற்று மதியம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதிக்கும் பொன்னம்மா மில் சந்தி ஊடாக பிரதான தபாற்கந்தோருக்கும் இடைப்பட்ட வீதியில் நீலநிற பொலித்தீன் பையிற்குள் பிறவுண் பையில் இருந்த அநாதை இல்லத்திற்கு கொடுக்கப்பட இருந்த பெருந்தொகை பணம் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்த இரக்க குணம் கொண்டவர்கள் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(அதிகூடிய சன்மானம் வழங்கப்படும்)

தொடர்புகளுக்கு: 0774598461, 0774667238 (7031)

# போர்க் குற்றங்கள் தொடர்பில்...

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக முரண்பாடுகள் தொடர்பான அனைத்துலக குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

அரசாட்சி, காணி விவகாரங்கள் மற்றும் அரசியல் தீர்வின் அவசியம் குறித்து அறிவு சார்ந்த பரிந்துரைகளை முன்வைத்துள்ள நல்லிணக்க ஆணைக்குழு முக்கியமானதொரு விடயமான அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சுதந்திரமான விசாரணை நடத்தக்கோரும் ஐ.நா. மற்றும் அதன் பங்காளர்களின் கோரிக்கையைக் கவனத்தில் எடுக்கத் தவறியுள்ளது.

இதனால் 2012 இல் ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவையின் மூலம் சுதந்திரமான சர்வதேச விசாரணைக்குழுவொன்றை உருவாக்குவதே சர்வதேச சமூகத்திற்கு இப்போதுள்ள கடமையாகும்.

இத்தகைய விசாரணை இல்லாமல் போரின் இறுதியில் இடம்பெற்ற குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கு அதிகபட்சம் சாத்தியமில்லை.

பொறுப்புக்கூறுதல் மற்றும் எல்லாத் தரப்பினரினதும் வன்முறைகளுக்கான காரணங்கள் பற்றிய முழுமையான புரிந்துணர்வுகள் இல்லாமல் போனால் எதிர் காலத்தில் முரண்பாடுகள் முளைவிட்டு வளரும்.

இறுதி இரண்டரை ஆண்டுகளாக போரின்போது பொதுமக்களுக்கு இழப்புகள் இன்றியோ அல்லது மிகக்குறைந்தளவிலான இழப்புக்களுடனோ போர் நடத்தப் பட்டதாக இலங்கை அரசாங்கம் மோசமான பரப்புரைகளை மேற்கொண்டுவந்த போதிலும் பொதுமக்கள் மீதான எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் பாரிய படு கொலைகள் பற்றிய சாட்சியங்களை ஆணைக்குழு புறக்கணித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் பல ஆண்டுகளாக கூறியதற்கு மாறாக போரின் இறுதிக் கட்டத்தில் கணிசமான அளவு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் உண்மையில் மருத்துவமனைகள் மீது எறிகணைகள் வீழ்ந்து வெடித்து சேதங் களையும் இழப்புகளையும் ஏற்படுத்தின என்றும் ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள் ளது.

பொதுமக்களுக்கு மரணங்கள் அல்லது காயங்களை ஏற்படுத்தியதற்கு பாது காப்பு படையினர் தொடர்புபட்டுள்ளதை இது ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் இத் தகைய மூன்று சம்பவங்களை மட்டும் ஆணைக்குழு கவனத்தில் எடுத்துள்ளது.

இந்தச் சம்பவங்கள் எந்தச் சூழ்நிலையில் இடம்பெற்றன என்பது குறித்து இன்னும் முழுமையான விசாரிக்குமாறும் தவறுகள் இடம்பெற்றமை விசாரணை களில் உறுதிப்படுத்தப்பட்டால், அதற்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன்னிறுத்தி தண்டிக்கப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு கூறியுள்ளது.

அத்துடன் போரைத் திட்டமிட்டு நிறைவேற்றிய அரசாங்க மற்றும் இராணுவ அதிகாரிகளை பாதுகாக்கும் நோக்கில் ஆணைக்குழு செயற்பட்டுள்ளது.

பல்வேறு காரணங்களுக்காக இந்த அறிக்கை ஏற்றுக் கொள்ளத்தக்க ஒன்றாக அமையவில்லை.

இலங்கை அரசினது ஆவணங்களை மட்டும் ஆணைக்குழு கருத்தில் கொண் டுள்ளது என்பதை அறிக்கை முழுவதும் வெளிப்படையாகத் தெரிகிறது.

அரசாங்கத்தின் தகவல்கள் சுதந்திரமான முறையில் ஆய்வு செய்யப்படவில்லை.

குறிப்பாக ஐ.நா. அனைத்துலக செஞ்சிலுவைக் குழு மற்றும் மோதல் வலயத் தில் இருந்த மூலகங்களினது தொடர்பாடல்கள், தணிக்கை செய்யப்படாத செய் மதிப் படங்கள் மற்றும் இராணுவத்தின் ஆளில்லா வேவு விமானங்களின் படங்கள் போன்ற ஏனைய சான்றுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

அதேபோல பாதுகாப்பற்ற நிலை உள்ளதால், போரின் இறுதிக் கட்டத்தில் போர் நடைபெற்ற பிரதேசத்தினுள் வாழ்ந்த ஆயிரக்கணக்கான சாட்சிகள் ஆணைக் குழு முன் சாட்சியமளிக்க முன்வரவில்லை என்றும் போர் வலயத்தில் பொதுமக் களுக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பான எந்தக் குறிப்பும் இல்லை என்றும் முரண் பாடுகள் தொடர்பான அனைத்துலக குழு குறிப்பிட்டுள்ளது.

அதி நவீன ஆடைத் தெரிவுகளுக்கு...




# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி — 2014 A/L — யாழ்ப்பாணம்

## கணித, உயிரியல் பிரிவு

பௌதிகவியல் — திரு. R. குகன், திரு. S. சோதிலிங்கம், திரு. R. குமரன்

இரசாயனவியல் — திரு. K. சிவத்திரன், திரு. M. மகேஸ்வரன்

உயிரியல் — திரு. M. அல்போன்ஸ், திரு. T. கெங்காதரன், திரு. T. தம்பிராசா, வழமையான ஆசிரியர்

இணைந்த கணிதம் — திரு. S. செந்தில்ராஜ், திரு. செந்தில்நாதன்

ஆரம்பம் : 28.12.2011 புதன் காலை 8.30

(C-5315)

## SPOKEN ENGLISH
### பேச்சு சிங்களம்

மானிப்பாயை அண்மித்த பகுதிகளில் ஓய்வுபெற்ற ஒருவரினால் வீடுகளுக்கு வந்து ஆங்கிலமும் சிங்களமும் பேசுவதற்கு எளிமையான முறையில் கற்றுக் கொடுக்கப்படும்.

தொடர்பு:- 0774041904 (7018)

## மின் உபகரணங்கள் பழுதுபார்த்தல்

Washing Machine (Full Auto, Semi Auto), T.V, Radio, Hi Fi Set up, Fan, Rice cooker, Blender, Fridge மற்றும் வீட்டு மின் உபகரணங்கள் அனைத்தும் உங்கள் வீட்டுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் வீட்டு வயரிங் திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:- 0778000748 (7028)

# சுந்தர்சன் நிறுவனத்தின்

## மாபெரும் மலிவு விற்பனையில் பரிசு வென்ற 40 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள்

1 ஆம் பரிசு - Single Door Fridge - பீற்றர் இமானுவேல், சில்லாலை
2 ஆம் பரிசு - Washing Machine - வில்லியம் றொபேட், உடுவில் தெற்கு
3 ஆம் பரிசு - 21" LG TV - சுதாகரன் பிரசாங்கிதன், சுன்னாகம்
4 ஆம் பரிசு - Greentel Mobile Phone G8 - ஜீவகுமார், காரைநகர்
5 ஆம் பரிசு - Mr. Plus Woofer - கஜந்தினி, சித்தங்கேணி
6 ஆம் பரிசு - Greentel Mobile Phone GT400 - குணசிங்கம், கொக்குவில்
7 ஆம் பரிசு - Mr.Light Torch Light - இராஜலிங்கம், சண்டிலிப்பாய்
8 ஆம் பரிசு - Mr. Plus Blender - மெல்சியா, ஆனைக்கோட்டை
9,10,11 ஆம் பரிசு - Rice Cooker - கந்தரத்தினம், அராலி - யோகேஸ்வரன், யாழ்ப்பாணம் - ஷஸ்மிதா, மானிப்பாய்
12,13,14 ஆம் பரிசு - Pedastal Fan - வலி தெற்கு பிரதேச சபை - ஆனந்தசிங்கம், நவாலி - கலையழகன், யாழ்ப்பாணம்

15 ஆம் பரிசு - Greentel Mobile Phone GT100
வசந்தன், மானிப்பாய்

16 - 20 ஆம் பரிசு - Table Fan
றமேஸ், உரும்பிராய் - ஜெயராணி, கொக்குவில் - திவாகர், பண்டத்தரிப்பு
போல் கமல்ராஜ், உரும்பிராய் - இராசன், சுதுமலை

21 - 25 ஆம் பரிசு - Sandwich Toasters
கணநாதன், வட்டுக்கோட்டை - சுகந்தன், சாவற்கட்டு - தீபிகா, மானிப்பாய்
கிருஷ்டா, இளவாளை - விஜயராகவன், கந்தர்மடம்

26 - 30 ஆம் பரிசு - Jug Kettle
ஆனந்தசிங்கம், நவாலி - விக்னேஸ்வரி, ஆனைக்கோட்டை - துளசிகாயினி, இணுவில்
யோகராஜா, சுன்னாகம் - ரூபசுதன், சுழிபுரம்

31 - 40 ஆம் பரிசு - Iron Box
றொபின்சன், ஆனைக்கோட்டை - சத்தியசீலன், மானிப்பாய் - கஜானன், மானிப்பாய்
இரட்ணசிங்கம், சுழிபுரம் - உதயனன், சுழிபுரம் - செல்வகுமார், பண்ணாகம்
மதி, யாழ்ப்பாணம் - இந்திராதேவி, மானிப்பாய் - ஜெயராஜன், வட்டுக்கோட்டை
அதியமான், புத்தூர்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.